நாள் ஆளர் ம. உ. க. பஞ்சரத்தினம். பதிவு எண் 2044

உ

தமிழர்

ஓர் இனிய தனித்தமிழ் மாத வெளியீடு.

தமிழ் நாட்டின் முன்னேற்றத்திற்குரிய
எல்லா வளர்ச்சித்துறைகளையும் விளக்குவது.

மலர் க. } குரோதன, மாசி. 1926 February—March { இதழ் கக

அடங்கல்.

எண்.	பொருள்.	பக்கம்.
1	சந்தாநேயர்களுக்கு முக்கிய அறிவிப்பு	485
2	"தமிழர்" கிடைக்கும் இடங்கள் ...	486
3	செந்தமிழ் நிந்தை சிவ நிந்தையே	487
4	வாழ்த்துப்பா ...	488
5	நுண் பொருள் நூறு ...	490
6	உள்ளக்கிடக்கை பனுவல் ..	492
7	இந்தியப் பெண்மக்களின் கல்வி ...	493
8	குரவர் மாணவர் குறிப்பு ...	495
9	வரைநூல் (தனித் தமிழ்ச்சொற்கள்) ...	497
10	கிள்ளிவளவன் ...	501
11	திருமுருகாற்றுப்படை ...	505
12	கௌரி சங்கரன் ...	509
13	முருகர் திருவிளையாடல்கள்	517
14	சமயம் ...	521
15	செய்திக்கோத்து ...	525
16	விளம்பரம் ...	528
17	ஒரு பவுன் இனும்! ...	531

25, மலைவாசல், தெப்பக்குளம், (போஸ்டு), திருச்சிராப்பள்ளி.

உ

“ தமிழர் ”

(ஓர் இனிய தனித்தமிழ் மாத வெளியீடு)

குரோதன, சித்திரை (1925 ஏப்ரல்) முதல் வெளிவருவது,

நோக்கங்கள்.— (1) தமிழ் மக்கள் எல்லோருடைய ஒற்றுமைக்காக உழைத்தல். (2) தமிழ் நாட்டிலுள்ள நிலவுரிமையாளர்கள், வணிகர்கள், மன்னர்கள், குரவர்கள், மாணவர்கள், தொழிலாளர்கள், மருத்துவர்கள், பெண்மக்கள், குழந்தைகள், உயர்ந்தோர், தாழ்ந்தோர் அனைவரும் முன்னேற்றமடைதல், (2) சமரச சமய உண்மைகளைப் பரவச்செய்தல். (4) எல்லா இயக்கத்தாருக்கும் பொதுவான அரசியல் துறைகளை விளக்குதல். (5) தமிழ்மொழி வளர்த்தல். (6) உலகநிகழ்ச்சி கூறல் (7) நூலாராய்ச்சி செய்தல். (8) பல துறைகளில் அறிவு வளர்ச்சிக்கான புதிய நூல்களை வெளியிடுதல். (9) புகைவண்டியில் செல்லுபவர்களின் துன்பம் நீக்க முயலல். (10) விடுகதை (1-பவுன் இனும்) (11) கைத்தொழில், விளம்பரம் பிறவுமாம்.

புரவலர்கள்:—

1. உயர்திரு சர். தி. செ. சிவஞானம்பிள்ளை, Kt. பி. ஏ. எம். எல். சி. சென்னை மாகாண வளர்ச்சித்துறை தமிழ் அமைச்சர்,
2. ,, சர். டி. தேசிகாசாரியார் அவர்கள். Kt. பி. ஏ. பி, எல், திருச்சிராப்பள்ளி ஜில்லாபோர்டு தலைவர்.

ஆயுட்கால உறுப்பினர்கள்:—

3. ,, சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள், திருப்பாதிரிப்புலியூர்.
4. ,, அரு. சு. வே காசி. விசுவநாதஞ் செட்டியார் அவர்கள், மலைக்கோயில் ஆட்சியாளர்.
5. ,, வனகராம் இராமநாதஞ் செட்டியார் அவர்கள், நாட்டரசங்கோட்டை, இராமநாதபுரம் ஜில்லா.
6. ,, இராம. கும. சு. குமரப்ப செட்டியார் அவர்கள், பலவான்குடி.

போற்றிப் புகழ்ந்த தமிழ் நாட்டுப் பத்திரிகைகள்.— (1) நவசக்தி (2) தமிழ்நாடு (3) லோகோபகாரி (4) திராவிடன் (5) தமிழ் சுயராஜ்யா (6) ஞானசாகரம், பல்லாவரம் (7) இலக்ஷ்மி (8) தாருல் இஸ்லாம் (9) செந்தமிழ்ச்செல்வி, சென்னை, (10) செந்தமிழ், மதுரை (11) ஊழியன், காரைக்குடி (12) வேளாள மித்திரன், திருவனந்தபுரம் (13) நவ இந்தியா, திருவாரூர் (14) பாரத மித்திரன், கும்பகோணம் (15) தமிழ்ப்பொழில், தஞ்சை (16) தேச ஊழியன், புதுக்கோட்டை (17) ஸ்ரீபுரிதா, காரைக்கால் முதலியன.

(தொடர்ச்சி அடுத்த பக்கம் பார்க்கவும்)

தமிழர்

சந்தா நேயர்களுக்கு முக்கிய அறிவிப்பு.

அன்பர்காள்! அடுத்த பன்னிரண்டாவது இதழோடு நமது "தமிழர்" வெளியீட்டின் முதல் வருடம் முடிந்துவிடுகிறது. அதற்கு அடுத்த இதழிலிருந்து "தமிழர்" இரண்டாவது மலர் ஆரம்பமாகிறது. சென்னையிலிருந்து வெளிவரும் "ஆனந்த போதினி" முதலிய பத்திரிகைகள் போல, நமது அடுத்த "தமிழர்" 12-வது இதழை வி. பி. யில் அனுப்பி இரண்டாவது ஆண்டு சந்தாத் தொகையைப் பெறக் கருதியிருப்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேம். இப்படிச் செய்வதால் அடுத்த மலர் எவ்வளவு காபிகள் அச்சிடலாம் என்பது நாம் தெரிந்து கொள்ளப் பெரிதும் உதவியாகவிருக்கும். இதுகாறும் "தமிழரை", தமிழர் காப்பாற்றி வந்தது போல் தங்கள் தங்கள் நண்பர்களையும் இதற்குச் சந்தாநேயராகச் சேர்த்து உதவினால், நாம் முன்னைவிட அதிக ஊக்கத்துடன் பல்வேறு வகையான அருமையும் பயனும் தரத்தக்க கட்டுரைகளை அச்சிட்டு வெளியிட எண்ணியுள்ளோம். ஆகவே, அன்பர்கள் இந்த சஞ்சிகை கிடைத்தவுடனே, அடுத்த ஆண்டிற்குத் தாங்கள் செலுத்தவேண்டிய சந்தாத் தொகையை 1926, ஜூன், முதல் தேதி (அட்சய ஆண்டு, வைகாசி மாதம் யஅ-ஆம்தேதி)க்குள் எமக்கு அனுப்பி விடுவார்களேயானால், அதனால் நாம் வீணாக ஒவ்வொருவருக்கும் வி, பி. செலவு செய்யும் 3 அணா இலாபமாகும். எமக்குத் தொந்தரவும் குறையும். 12-வது இதழிலே இதுவரைக்கும் தமிழரில் வெளிவந்த பொருள்களின் அட்டவணைக் குறிப்புகளும், ஒரு புத்தகமாக பைண்டு செய்து வைத்துக்கொள்ள, முன் பக்கமும் அச்சிட்டுச் சேர்த்தனுப்புவோம். அத்துடன் அமெரிக்கா, ஐரோப்பா, முதலிய வெளிநாடுகளில் வெளிவரும் பல அதிசய செய்திக்கோத்தும், வாசிப்போரெல்லாம் ஆனந்த முறவும், பல வழிகளில் பெரும்பொருள் சேகரிப்பதற்கான பல கூட்டுறவு முயற்சித்துறைகளும் பிறவும் ஒருங்கே வெளிப்படுத்த எண்ணியுள்ளோம்.

இரண்டாவது ஆண்டு சஞ்சிகை வேண்டாதவர்கள் (31-5-1926), அட்சய, வைகாசி 18-ஆம் தேதிக்குள் எமக்குத் தெரிவித்துவிட்டால், அவர்களுக்குத், "தமிழர்" 12வது இதழ் எப்போதும் போலச் சாதாரண தபாலில் அனுப்பி விடப்படும். இதைத் தெரிவிப்போரும், முன் பணம் அனுப்புவோரும் கட்டாயம் தங்கள் தங்கள் சந்தா எண் குறிப்பிட வேண்டுகிறேம்.

இங்ஙனம்,
தங்களன்பிற்குரிய,
ம. உ. க. பஞ்சரத்தினம்,
காரியதரிசி.

25, மலைவாசல்,
தெப்பக்குளம் (போஸ்டு,)
திருச்சிராப்பள்ளி.

புரவலர் காணிக்கை ரூ.	100.	ஆயுட்காலசந்தா ரூ.	25.
வெளிநாடுகளுக்கு ,,	3	உயர்ந்தபதிப்பு	2/8/-
சாதாரணபத்திரிகை ,,	2.	தனிச்சஞ்சிகை அணா	4

"தமிழர்"

பத்திரிகைகள் கிடைக்கும் இடங்கள்:—

1. இரயில்வே ஸ்டேஷன்களிலுள்ள எல்லா ஹிக்கின்பாதம் புத்தக சாலைகள்.
2. சென்னை:-சோல்டன் கம்பேனி,
   193, திருவல்லிக்கேணி ஹை ரோட்,
3. சென்னை நியூஸ் ஏஜென்சி, எஸ்பிளனேட்,
   ஹை கோர்ட்டுக்குச் சமீபம்.
4. தென்னிந்தியா நலவுரிமைக் கூட்டுறவு சங்கம், கோயமுத்தூர்.
5. T. M. சிவஞானம் பிள்ளை யவர்கள், ரைட்டர் (எழுத்தாளர்)
   மகாஜன ஹைஸ்கூல், ஈரோடு
6. திரு T. S. கணபதி பிள்ளையவர்கள், காரியதரிசி,
   தியாகராய நிலையம், சேலம்.
7. ,, தீட்சதர் புத்தகசாலை, கும்பகோணம்.
8. ,, தேவராஜுலு நாயுடுகாரு, போஸ்டாபீஸ், தஞ்சாவூர்.
9. ,, N. சிவகுருநாத பிள்ளையவர்கள்,
   சைவப்பிரகாசம் அச்சுக்கூடம், தூத்துக்குடி
10. ,, S கோபால், இறக்குமதி, ஏற்றுமதி வியாபாரம்,
    178, செலிஜி ரோட்டு, சிங்கப்பூர்,
11. ,, பெடரல் ரப்பர் ஸ்டாம்பு சம்பெனி,
    3, 5, ராட்ஜர் மார்க்கட்டு தெரு, கோலாலம்பூர்,
12. ஷை............ஐபோ
13. ஷை.........சிங்கப்பூர்,
14. ஷை.........பினாங்கு

    ஷை கம்பெனியின்கீழ் குறிப்பிட்ட இரயில்வே புத்தகசாலைகளிலும் கிடைக்கும்:—

15. மலாக்கா, செராம்பன், கிலாங்கு, தபாரோட்டு, டைப்பிங்கு, பாரிட் பந்தர், அலர்ஸ்டார் கெடா.
16. பிரிட்டிஷ் அமெரிக்கன் நியூஸ் கம்பெனி, புத்தகவியாபாரிகள், 6, பாட்டரிதெரு, சிங்கப்பூர் இன்னும் பிற இடங்களிலும் கிடைக்கும்.

மற்ற ஊர்களில் ஏஜண்டுகள் தேவை.

ஏஜண்டாக இருக்கப் பிரியப்படும் அன்பர்கள், அமைச்சர், "தமிழர் நிலையம்" **25**, மலைவாசல், தெப்பக்குளம், (போஸ்டு) திருச்சிராப்பள்ளி என்ற விலாசத்திற்கு எழுதவும்.

செந்தமிழ் நிந்தை சிவநிந்தையே யாம்.

அன்பினந் திணையென் றறுபது சூத்திரம்
திருவாய் மலர்ந்த சிவபெரு மானே!
கொங்குதேர் வாழ்க்கைச் செந்தமிழ் கூறினன்
மதிமலி புரிசைத் திருமுகம் தந்தனன்
வள்ளுவர் நூற்கு வளர்சிறப் புரைத்தனன்
கீரன்முன் றோன்றிக் கிளர்சினப் பாவும்
பொய்யா மொழிமுன் புனைந்துரை பாவும்
இயம்பின னன்றியு மெழிலார் தில்லையுள்
அடியார்க் கெளியனென் றருளித் தந்தனன்
வாசகங் கோவை வளம்பெற வரைந்தனன்
தொண்டத் தொகையும் தொண்டர் புராணமும்
நிறைவினையெய்த அடியெடுத் துதவினன்
பரசிவன் பாகத் தமர்ந்த பாவையும்
கொணர்ந்தேன் சோறெனக் குளிர்கவி கூறினள்.
நாடா முதலென நாமகள் நவின்றனள்
தந்தையார் செவியில் மந்திரம் தந்தவன்
பகழிக் கூத்தன் பாடல் கேட்கவும்
பொய்யா மொழியெனும் புலவர்பாக் கேட்கவும்
தாமவர் தம்மேற் றமிழ்ப்பாட் டுரைத்தனன்
உருத்திர சன்மரா யுரைவிரித் தருளினன்
நம்பியாண் டாரெனும் நம்பி தனக்கே
யும்பல் முகத்தோன் செம்பொரு ளுரைத்தனன்
நான்முகத் தவனே நானிலந் தன்னில்
வள்ளுவ னாத்தமிழ் மாமறை யருளினன்.
மணவாள னென்னும் மாமுனி தன்னைப்
பெருமா ளழைத்துப் பேசின ரென்பர்.
இவ்வா றெல்லாம் இயற்றமிழ் தன்னை
அரனய னரிமுத லாமுத் தேவரும்
மூத்த பிள்ளையும் முருகக் கடவுளும்
அலைமகள் கலைமக ளாமணங் குகளும்
பேசின ரெழுதினர் பீடுறப் பாடின
ரென்றா லிதன்சீ ரியம்பவும் போமோ!
இப்பரி லன்றோ இவையெலா மென்றால்
திருக்கைலா யம்சென்ற சேரமான்

சிவபெரு மான்றன் திருச்சந் நிதியில்
உலாவெனும் நூலை யுரைத்தரங் கேற்ற
எல்லாத் தேவரு மிருஞ்செவிக் கமுதென
உண்டு களித்தவிவ் வொண்டமிழ் மொழியைத்
தேவ பாஷையாய்ச் செப்புதற் கியாதும்
ஐயம் வேறுண்டோ ஆரியப் புலவீர்!
ஆரியம் நன்று தமிழ்தீ தெனச்சொன
காரியத் தாலே காலன்வாய்ப் பட்டு
மாண்டு மீண்டனன் வாய்மதக் கோடன்
முத்தமி ழுருவே முன்னோ னுருவெனச்
சத்திய வசன சாத்திரம் கூறலால்
செந்தமிழ் நிந்தை சிவநிந் தையேயெனச்
சிந்தையி லுணர்ந்து செந்தமிழ் போற்றி
வாழுமின்! வாழுமின்! வாழுமின் னீரே!

சதாசிவம்பிள்ளை,
(நாகை நீலலோசனி பத்திராதிபர்.)

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

திரிசிரபுரம் சைவசித்தாந்த சபை.

(21-6-1885ல் நிறுவப்பெற்றது.)

இச்சபையின் தலைவர்களுள் ஒருவரான
திருவாளர் மு. சி. பூர்ணலிங்கம் பிள்ளையவர்கள்
பி. ஏ., எல். டி.,
இவ்வூரைவிட்டுத் தன் சொந்த ஊராகிய நெல்லையம்
பதிக்குப் போகும் போது இச்சபையார் கூறிய

பிரிவுரை வாழ்த்து.

அறுசீர் ஆசிரிய விருத்தம்

பூமலிசீர்த் தடமலிநன் னெல்வேலி மாநகரம் புரிந்த நோன்பால்
தூமலிசீர் வாய்மையொடு குணமுழுதோர் படிவுகொடு தோன்றிற்றென்னத்
தேமலிசீ ருயர்குடியிற் றிகழவரு கோமானே! செல்வப் பேறே!
மாமலிசீர்ப் பூரணலிங் கக்கோவே! மகிழநீ வாழி மாதோ!

கம்பனினுங் கும்பனினுந் தமிழதிகங் கற்றபெரு கவிவல் லோனே!
செம்பதும மாதுறையு மணிமார்பா! ஆங்கிலமுஞ் சிறக்கக் கற்றுப்

பம்புதிரைக் கடலுலகிற் பி. ஏ. எல். டியென்னும் பட்டம் பெற்றாய்!
அம்புவிசொல் பூரணலிங் கக்கோவே! வாழிநீ அவனிக் கம்மா! (2)

வெள்ளையரு முளத்தஞ்சி மூக்கினுனி விரல்வைத்து வியப்புக் கொள்ளப்
பள்ளமுறும் வெள்ளமெனப்பொருளமைய நயம்பெருகப்பயனே யோங்கத்
தெள்ளுபுக ழாங்கிலச்சொற் பொழிவாற்றும் நாவலனே! திகழ்நூல் யாரும்
கொள்ளவரும் பூரணலிங் கக்கடலே! வாழிநீ! குலவ மாதோ! (3

தமிழ்நூலின் சுவையெல்லாங் கண்டுநனி யெடுத்தோதும் தமிழ ரேறே!
தமிழ்வாழ்வு பெறவுழைக்குந் தனிவீரா! தமிழ்க்கின்பத் தாயாம் நேயா!
தமிழ்நாட்டுப் பல்கலையின் கழகத்தே அமைச்சாகித் தாங்கும் வல்லாய்!
தமிழ்நாட்டும் பூரணலிங் கக்கோவே! வாழிநீ தழைத்து மாதோ! 4

இச்சிரபு ரத்தொளிரும் ஹீபர்கல் லூரியிலே எவரும் போற்ற
மெச்சுபெரும் ஆங்கிலஞ்சொல் ஆசிரிய நிலையினனே! விரும்பி என்னே
உச்சிதவிவ் வூர்விட்டுன் னூராகும் நெல்வேலி யூர்க்கே ஏக
இச்சையுளங் கொண்டனையே பூரணலிங் கக்கோவே! என்சொல் வோமே

எம்மூரிற் பிரியமனம் வைத்திட்டாய் நெல்வேலி யெழிலூர்க் கேகச்
செம்மூருன் னுளப்பிரியங் கொண்டனையே சீரியனே! சிறந்த நின்போல்
எம்மூரி லொருவரையாங் காண்பரிதே என்செய்வோம் எம்மைப் போல
உம்மூரிற் பலரிருப்பார் பூரணலிங் கக்கோவே! உவக்க நீயே! (6)

என்றானு மெம்மைநீ யொருநாளு மறவாயென் னெண்ணங் கொண்டும்
நின்றாரு முளங்கொண்டு வந்தெமக்குக் காட்சிநனி நேர்வை என்றும்
மன்றாது குடைந்தளிகள் பாடுந்தார்ப் புயத்தழகா! மதிவல் லன்பா!
கன்றாது நினைத்தெண்ணித் தெளிந்தோமாற் பூரணலிங் கக்கோ மானே;

இந்நெடுநா ளெமக்கின்பே செய்தமைமையைக் கணக்கிட்டிங் கெண்ணலாமோ?
அந்நெடுவா னெனப்பயனே கருதாது செய்தனையே அருமை ஐயா!
மன்னெடுநா ளிப்புவியி லின்னுநீ மன்னிநனி வாழி என்னப்
பன்னெடுநாக் கொடுதுதிப்பம் பூரணலிங் கக்கோவே! பரவி யாமே! (8)

சாற்றுபெருங் குலமகனே! குணநிதியே! சிவசமயா! தமிழ்க்கோ மானே!
ஆற்றுபெரு நூற்கடலே! அமைந்தபெரு வாய்மையனே! ஆண்மை வேளே!
போற்றுவரு தமிழ்நாட்டின் பெரும்பேறே! மனைமக்கள் நாவலக் கூடிச்
சாற்றுதிருப் பூரணலிங் கக்கோவே! வாழிநீ தரணி நின்றே. (9)

திருச்சிராப்பள்ளி,
குரோதன, பங்குனி, ௨௬,
8—4—1926.

ம. உ. க. பஞ்சரத்தினம்,
அமைச்சர்,
திரிசிரபுரம், சைவ சித்தாந்த சபை.

உ

திருமுருகன் திருவடியே துணை.

அமிர்தஞ் சுந்தரநாதனார் இயற்றிய

நுண்பொருள் நூறு.

(422-ம், பக்கத் தொடர்)

கடவுள் இலக்கணம்.

தானே முதலாய்த் தனக்குமே லாமொரு
முதலே யிலதாய் முற்றறி வினதாய்
நடத்துவா ரின்றி நடக்குமோர் மூப்பாய்
இயற்கை யறிவாய் இன்பப் பிழம்பாய்
எல்லாந் தானே இனிதி னுணரும்
பேரறி வாகிப் பெரிய பொருளாய்ச்
செம்பொரு ளென்னுஞ் சீர்மைத் தாகி
அவாவுங் கட்டும் அற்ற பொருளாய்
முடிவி லாற்றலின் முழுப்பெருந் தனியாய்
எல்லையி லின்ப எழிலே யாகிப்
பேரருட் கடலாய்ப் பேணுந் தெருளாய்
எண்குண மலிந்தே ஈறில தாகி
வழுத்தும் அகர எழுத்துப் போலக்
குறைவற எங்கும் உறைதரும் இறையைப்
பணிவார்க் கன்றிப் பிணிவாய்
நீங்கல் அரிதால் நினைந்தோர்ந் திடினே. (3)

வான்சிறப்பு

கதிரை மதியைக் கணக்கின் மீனைக்
காரைத் தழீஇக் கவின்பெற நிலனை
ஓம்பும் வானை உள்ளரும் முதல்வன்
தீம்பரி சுணர்த்துஞ் செவ்விய பொருளைக்
கண்டு களிக்குங் கருத்தினர் தாமும்
மிண்டு பேசி மேதகு கடவுள்
உண்மையை மறுப்பரோ உளத்தெணி
நண்ணுமன் பின்றி நவையுறத் தாமே. (4)

செங்கதிரோன் சிறப்பு.

ஒளியாய் இருளை ஓட்டு வித்தே
அளியாய் மழையை அவனிக் காக்கும்

விளியாப் பெரிய வெஞ்செங் கதிரைக்
களியாற் போற்றுவார் கடவுளைப் போற்றுவார்
தெளிவாய் அவ்வுரு செம்பொருளுருவா
மொழிமா ஓத்தின் முறைமை கண்டே.

தண்கதிர்ச் சிறப்பு.

அமுது கொப் பளித்தே ஆருல குய்ய
இரவில் ஒளிரும் இன்பக் கதிரைத்
தண்ணதி யுலாவும் தகைபெருஞ் சடைமுடி
இறைவன் வேணி இயற்பெரும் அணியைப்
போற்றுதும் பரவி! போற்றுதும் பரவி!
இறையுரு தானும் இன்பப் பரிசை
ஓத்தெலாம் உரைக்கும் உண்மை கண்டு
தெள்ளிய உளத்திற் றிகழ
கள்ளமி லன்பிற் கவின் பெறத்தானே.

காரின் சிறப்பு

காரைப்போற்றுதும்! காரைப்போற்றுதும்!
கைம்மா றுகவாக் கவின்திரு அருளாற்
கருவியா யுலகைக் காத்தருள் புரிந்து
கணக்கி லின்பங் காட்டிடுங்
கடவுட் காரைக் கருத்துறக் கண்டே.

ஐம் பெரும் பூதத்து அடைவு

மன்னுயிர் தாங்கும் மண்ணை மருவும்
மண்ணு ளடக்கும் மாநீர் தன்னை
நீருளடக்கும் நெருப்பை நிலையுறத்
தீயினை யடக்குந் திகழ்திருக் காலை
காலு ளடக்கிடும் கவின் பெருவிண்ணை
கண்டு பெருமை கருத்து ளாக்கிக்
கடவு ளுருவே காண்மோ வென்னக்
கறையும் மறையின் கருத்துத்
தேர்ந்து போற்றுவோர் தீமை யிலரே.

பெரியாரைப் போற்றலின்பேறு.

கண்டு தன்னைக் கடவுளை இன்பு
கொண்டு நிற்குங் குறையா ஞானப்

பெரியார் தாளைப் பேணி நின்றார்
விரிபெருங் கட்டாம் வேதனை மாசெனும்
மலத்தின் நீங்கி மாணொளி கொண்டு
நலத்தரும் இன்ப நாடுவீ டுற்றே
இருப்ப ரென்ன இசைத்திடு மறைகள்
அதனால், விருப்பொடு பணிவாம் வியன்பெருந் தகையார்
நல்ல தாளை நாடி
அல்லும் பகலும் அகனுறக் கொண்டே.

பெரியார் இயல்பு.

உயிர்க்கெலாம் இரங்கும் உணர்வுடை யாராய்
உயிர்ச்செயல் என்னார் ஓங்கி நிற்கும்
ஒப்புயர் வில்லான் ஒருவன் செயலெனாஅத்
தப்பற யாதுந் தண்ணளி யோடு
செய்வன செய்து சேர்பயன் கருதா
மெய்வனப் புடைய மேதகை யோரே
உள்ளங் கனிந்தே யூன்மறந் தொருவன்
நள்ளருந் தாண்மலர் நாடிய தகையார்
அன்னார்ப் போற்றும் அழகினர்
பின்னம் இல்லாப் பேறுறு வோரே

உள்ளக் கிடக்கை உரைக்கும் பனுவல்.

ஆறுசீர் விருத்தம்

நிலம்படைத் தென்ன நல்ல நிறைதரு செல்வம் பெற்றென்
குலம்படைத் தென்ன மேலாங் குடிபடைத் தென்னுத் யோகத்
தலம் படைத் தாலு மென்ன "தமிழராந்" தாளை யுன்னி
நலம் படைத் தோங்கச் செய்யும் நயமிலார் புவிக்க ணம்மா.
மொழியினில் ஆர்வம் உள்ளார் மொழிசிவத் தார்வம் உள்ளார்
இழிவிலா நாட்டின் ஆர்வம் ஏற்றமா வுள்ள கோளார்
வழிவரு மக்கள் தம்பால் வாட்டமில் ஆர்வம் உள்ளார்
பழியறத் "தமிழர்"த் தாளைப் பண்புடன் போற்று வாரே,

இங்ஙனம்,
தமிழர்க்கு அடிமை,
சே. வையாபுரிப் பிள்ளை,
திருநெறித்தமிழ்க்கழகம் மாணவர்

உ

தமிழர்,

ஓர் இனிய தனித்தமிழ் மாத வெளியீடு.

மலர் க.] திருச்சிராப்பள்ளி, குரோதன, மாசி [இதழ் கக.

"அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு"—(திருக்குறள்)

இந்திய பெண்மக்களின் கல்வி.

(457-ஆம் பக்கத் தொடர்ச்சி)

மக்களின் இன்பத்துக்கும், பெருமைக்கும், மறுமைக்கும், பெண்மக்களே பெரிதும் உதவிவருதல் கண்டும், அவர்களில்லையேல் உலகமில்லையென்றும், அவர்களுடைய பெருமையைத்தான் பெரும்பாலும் இலக்கியங்கள் பேசுகின்றனவென்றும் நாம் தெரிந்திருந்தும் அவர்களைக் கல்வியின்றி, குணமின்றி, அழகின்றி, உடல்நலமின்றி, பெண்மையின்றி மேன்மேலும் கீழ்ப்படுத்தி வருதல் நமக்கு அழகாகுமா? அவர்களுக்குத் தக்க கல்விப்பொருள் ஈந்து பலவகை நற்குணங்களையும் புகட்டி அவர்களுடைய அழகையும் உடல் நலத்தையும் அதிகப்படுத்துவோமாயின் நம் நாட்டு மக்கட்கு வேறு கவலையொன்றுமேயில்லை. நம் நாடு இன்பமயமாக விளங்கும்; ஆண்மக்கள் தமது கடனைத் திறமையுடன் ஆற்றுவர்; நம் நாடு முன்னேற்றமடையும்; பெருமை பெறும்; புகழுடன் துலங்கும். நமது பெரியார்கள் தக்கபடி பெண்கள் கல்வியை முறைப்படுத்துவாரென நம்புகின்றோம்.

இக்கட்டுரையை முடிக்குமுன்னர், பெண்கள் உயர்நிலை யடையக்கருதி, சீர்திருத்தத்திற்கும், முன்னேற்றத்திற்கும் உழைப்பவர்களுக்கெல்லாம் கீழே குறிப்பிட்டுள்ள சிலவற்றை நாம் ஞாபகப்படுத்த எண்ணுகின்றோம். இக்காலத்தில் நமக்குக் கிடைத்திருக்கும் ஆங்கிலக் கல்வியின் பயன் என்னவென்றால், ஆயுள் முழுவதும் வயிற்றுப் பிழைப்பிற்காகவே உழைப்பது என்பதுதான். நாள்

முழுவதும் தாங்கள் செய்யும் வேலைகளிலே சிறிதும் குற்றமில்லா மல் தப்பிப்பிழைத்து எப்போது உதவிச்சம்பளம் (பென்ஷன்)பெறு வோம் என்பதே அல்லும் பகலும் கவலையாயிருக்கிறது. சில குடும் பங்களில் தகப்பன்மார்கள் விடியற்காலையில் தங்களுடைய குழந்தை கள் படுக்கையைவிட்டு எழுமுன், எழுந்து தங்கள் வயிற்றுப்பிழைப் பிற்காகச் சென்றுவிடுகிறார்கள். பின்னர் இரவில் குழந்தைகள் உறங்கினபிறகே வீடுவந்து சேருகிறார்கள். இப்படியாக பல வருடங் கள் தங்கள் குழந்தைகளைச் சரியானபடி கவனிக்க முடியாமலேயே தகப்பன்மார்கள் காலங்கள் கழிந்துவிடுகின்றன. தாய்மார்களுக்கோ தங்கள் குழந்தைகளைச் சரியாக நடத்தத்தெரியாத தன்மையால், குழந்தைகள் யாருடன் பழகுகின்றது; அவைகள் சிறுபொழுதில் என்னென்ன பழக்கங்கள் கற்றுக்கொள்ளுகின்றன; அவைகள் பிற் காலத்தில் இருக்கவேண்டிய நிலைமையென்ன; அவைகளை எந்த முறைகளிலே பயிற்றல்வேண்டும் என்னும் முறைகளைச் சிறிதும் கையாளாமல், குழந்தைகளைச் சிறிதும் கவனிக்காமல் விட்டுவிடு ரூர்கள் குழந்தைகளோ கெட்ட சகவாசத்துடன் பழகுவதால், வயது வளரவளர பெற்றோர்களுக்கும் மற்றவர்களுக்கும் யாதும் உபகாரமில்லாதவர்களாக ஆகி, பின்னர் தங்களைப் பெற்று போற்றி வளர்த்தெடுத்தவர்களுக்குக்கவலையும்துன்பமும் தர ஆளாகின்றூர்கள்.

இந்தவிதமான கவலைகளெல்லாம் நீங்கவேண்டுமானல், நமது பெண்மக்களெல்லாம் தக்க அறிவுடையவர்களாகவிருந்தால் தங்களை யும் காத்துக்கொண்டு தங்கள் கணவர்களுக்கு வேண்டிய பணிவிடை களையும் செய்து, தம் மக்களையும் போற்றக்கூடிய தகைமையுடைய வர்களாவார்கள். பெண்களுக்கு அளிக்கக்கூடிய கல்வி இத்தன் மைத்தென நமது நாயனுர்" வாழ்க்கைத்துணை நலத்திலும்" "இல் லற வியலி" லும், திறம்படக் கூறியுள்ளார்,

அதனை அறிந்து அதன்படி பெண்மக்களுக்கு ஏற்ற கல்வியைக் கொடுப்பார்களானல், ஒவ்வொரு குடும்பமும் இன்புற்று வாழ முடியும்.

"இல்லதெ னில்லவண் மாண்பானு லுள்ளதெ
னில்லவண் மாணுக் கடை".

என்னும் திருக்குறளாலும், இல்லறவியலிலுள்ள ஏனை அருமருந் தன்ன திருக்குறட்பாக்களாலும், இது செவ்விதின் விளங்கும்.

தாள் ஆளர்.

குரவர் மாணவர் குறிப்பு.

(427—ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் நாட்டில் பல வகுப்பார்களுக்குப் பலபெயர் வழங்கி வருகின்றன. பலவகுப்பினர் பிள்ளைகளும் மாணவர்களாக உங்களிடம் படிக்கலாம். ஐயன், வெள்ளாளன், பிள்ளை, செட்டி, முதலி, கார்காத்தான், நாயக்கன், மறவன், கோன், நாடான், குறவன், பள், பறை, பரவன் முதலான பெயர்கள் வழக்கிலுள. ஐயன் என்றால் பெரியவன். தந்தையை ஐயாவென்றழைத்தல் தமிழறிஞர் வழக்கு மற்றவர் வழங்குஞ்சொல் அப்பன். இம்மொழியை அப்பா வென்று திரித்து வழங்குவர் பிராமணர். அன்னாரைப்பின்பற்றி தமிழரும் தந்தையை அப்பா வென்று கூறத்துணிந்துளார். பிராமணர் தந்தையை அண்ணா வென்பர். தமையனையும் அப்பெயராலழைப்பர். அரசனுக்கு அண்ணல் என்ற பெயர் வழங்கும். அண்ணா, அண்ணன், அண்ணல் என்ற கிளவிகள் பெரியவன் என்ற பொருளையேதரும். வீட்டிற்குப்பெரியவன் அண்ணா, அவனுக்கடுத்த பெரியவனாகிய தமையனுக்கும் அண்ணா என்ற பெயர் வழங்கிற்று. ஊருக்குப்பெரியவன் அண்ணல், அண்ணல், என்று பாக்களில் வரும்.

வெள்ளாளன், வேளாளன். வேளான் இவற்றை ஆராய்வாம். வெள்ளத்தைத்தடுத்துத்தேக்கி குளங்களில் நிரப்பிப்பயிரிடுபவர் வெள்ளாளர். வேளாளன் (மண்ணை) நிலத்தைப்பண்படுத்திப் பயிரிடுவோன். வேள்-(மண்); நிலத்தை ஆள்பவன் வேளாளனும். பயிரிடுவோரும், பயிரிட நிலங்கொடுப்பவருமாக வேளாளர் இருவகைப்பட்டனர். மண்ணைப்பிசைந்து மட்கலங்களாக்குவோன் வேளான். அவன் குய(ச)வன் எனவும் படுவான்.

பிள்ளை:—வேளாளருக்குச்சிறப்புப் பெயர். அன்னாரை அரசன் தன்பிள்ளையாகப் பாவித்து நடத்திவந்த நிமித்தம் அப்பெயர் வந்ததென்பர் பெரியோர். தாய்க்குப்பிறப்பது பிள்ளை. ஆதலின் எவ்வகுப்பாரும் இச்சிறப்புப்பெயரை வகிக்கின்றனர். ஆயர், அகம்படியர், நாடார், ஈழுவர் முதலானோர் பிள்ளை என்ற பெயரைத்தாங்கி வருகின்றனர். ஈழுவர் ஈழத்துப்பிள்ளையென்பர். நாடார் நாடாளும்பிள்ளை, மாவகுப்பில் தென்னம்பிள்ளை ஊர்வனவற்றில் அணிற்பிள்ளை எனப்பெயர் பெறும். செட்டி என்பது வணிகப்பிள்ளை; வீண் செலவு செய்யாமல் செட்டாக வாழுமக்களை செட்டிப்பிள்ளைகள் என்

பர். செட்டு என்றால் வணிகம்; செட்டித் தொழில் செட்டிமை எனப்படும். செட்டிமை என்பதற்குப் பொருளழுத்த முடைமை. உலோபம், இவறல் என்றபொருள் அன்னார் தன்மை, ஒழுக்கங்களால் வந்தது போலும். பொருளைக்கொண்டு பொருளையீட்டு முறைமை செட்டியதாம். ஆதலால்; "செட்டிக்கு வேளாண்மை சென்மப்பகை" என்ற முதுமொழி பிறந்தது போலும், தெலுங்கில் ஜட்டி என்பது தமிழில் செட்டி எனமாறி 'மல்லச்செட்டி, என்றால் மல்லுக்கு [சண்டைக்கு] நிற்பவனெனப்பொருள் வந்தது.

முதலி—முதலையுடையவன்; பணக்காரன். அரச அவையில் முதலிடம்பெற்ற காரணத்தால் முதலி எனப் பெயர் வந்ததென்றுங் கூறுவர். பணத்தில் மேன்மையுற்ற கைக்கோளரும், நெசவுகாரரும், போரில் குருதிவெள்ளம் பெருக்கிய கைவேல் வீரராகிய செங்குந்தரும் முதலிகளெனப்பெயர் பெற்றுளர். "மூன்றையுங் கொடுத்தது முதலி" என்று ஒருபாவடியுளது.

கார்காத்தான் – இருள், (கறுமை)கொண்ட மேகத்தைக் காத்து மழைபெய்யச் செய்தவன், கார்காலத்தில் நெற்பயிரிட்டு அதனைக் காத்தவன். தஞ்சாவூர் ஜில்லாவில் காரைக்காடு – சுண்ணாம்புத் தரையுடைய காடு உளதென்றும், அதில் மழைக்காலத்தில் மட்டும் நெற்பயிராக்க முடியுமென்றும், அவ்வாறு உண்டாக்கும் பயிரைப் பாதுகாத்து வீடுசேர்த்தல் தொழிலென்றும், பலவாறு வரலாறு கூறுவாருமுளர். 'காரைக்கால்' என்ற பட்டினத்திற்கு காரை மீனின்மிகுந்துள்ள வாய்க்கால் என்பதே பொருளென்பர். எங்ஙனமாயினும், கார் காத்தானுக்குப் பிள்ளை என்ற சிறப்புப்பெயரே யுளது. பிள்ளை, முதலி, கார்காத்தான் என்ற மூவகுப்பினரும் வேளாளரெனப்படுவர். அரசனால் நன்கு மதிக்கப்பெற்ற கார்காத்த பிள்ளைக்குப் பிள்ளையன் = பிள்ளை + ஐயன் என்ற சிறப்புப்பெயர் நெல்லையம்பதியில் இன்றும் வழங்குகிறது.

நாயக்கன் = நாயகன் = அரசன், தலைவன், பாளையக்காரன். நாயுடு என்பது தெலுங்கு மொழி. நாய்க்கர், மாக்கள் வழங்குஞ்சொல் நாய்கர்—செட்டிகள். நாயகர் என்பது நாய்க்கரின் திரிபு, 'சோமசுந்தர நாயகர்'.

(தொடரும்)

மு. சி. பூர்ணலிங்கம்பிள்ளை பி.ஏ., எல்.டி.

Tamil Scientific Terms

GEOMETRY

(BY P. V. MANICKAM NAICKER)

A gentleman in the Educational line writes from Ambasamudram under date the 3rd istant asking for pure Tamil words for over 260 English Scientific terms pertaining to Arithmetic, Geometry, Trignometry, Algebra, and Mensuration and states he is interested in developing the Tamil language without adulterating it if possible. As this is a matter of general interest I prefer to answer him through the press so that other scholars may co-operate in our endeavours and offer their suggestions as well to develop each language in its own line. I shall thank you much if you can spare some space in your columns for this subject.

As far as my knowledge of the Tamil language goes, it has roots equivalent to all roots found in any other highly developed language and as such there is no need to borrow and thus destroy its own genius. Further, if Tamil terms are chosen for the Tamil language they will be self explanatory. The Tamilian students can grasp their meaning more easily than those of borrowed terms. The terms will no doubt sound strange in the beginning but after some use they will become familiar and even get sanctified. Even absurd terms such as male screw and female screw in English Engineering got sanctified by use and there are more absurd terms still more sanctified in our nearest neighbour. We shall take care not to allow such terms in the Tamil scientific vocabulary in due obedience to the injunctions of the Tamil grammar under இடக்கரடக்கல் viz., "அவையில் கிளவி மறைத்தனர் கோடல்"

The gentleman has given the terms in the alphabetical order, but it is preferaple to deal with terms pertain-

ing to each subject separately and that in the order of the evolution of each subject.

According to the philosophic basis of the Tamil language verbal roots will admit of agglutination for all conceivable purposes better than nominal roots and so verbal roots are as a rule preferable for constructing scientific terms.

I shall deal with Geometry in this note and take up the other subjects later. Many alternative Tamil terms will appear at first sight quite as and even more suitable than those recommended herein by me but the real test of their suitability is in seeing whether they lend themselves for application universally within the science.

Point is புள்ளி or குற்று of which the latter is not only verbal but also highly scientific in its conception and so preferable for use as standard scientific term, குறை, குறுகு, குற்றி, etc., have the common sound root of குற் with குற்று and the underlying sense is reduction and the sense in the term குற்று is the result of reduction to the ultimate limit that is a point which has no dimensions.

Line is கோடு or வரை of which the latter is not only verbal but also highly scientific in its conception and hence preferable as standard scientific term. வரி, வரிதல், வரைதல், வருவுகல் (genuine Tamil word though not found in Winslow) have the common sound root வர், to draw from one point to other points, and a geometrical line is the track of a moving point.

Straight line is நேர்வரை and straightness is நேர்மை.

Curved line is நெளிவரை curve is நெளி and curvature is நெளிவு.

The word வளைவு conveys the sense of flexion and contra flexion is எதிர் வளைவு.

Angle is மூலை or முடக்கு but the latter being verbal is preferable as standard term and its easy adaptability for

all purposes of geometry and trignometry by agglutination will be evident from the following:—

Acute angle is கூர் முடக்கு

Obtuse angle is விரி முடக்கு.

Right angle is செம்முடக்கு, where செம் means right, but முழு முடக்கு meaning complete angle will have better scientific significance particularly when we deal with complementary aud supplementary angles and it is more preferable.

Angular figure or that which has angles is முடக்கு வடிவம் or briefly முடக்கி.

Triangle, a figure which has three angles is மும்முடக்கி.

Quadrangle, one with four angles is நான் முடக்கி.

Pentangle or Pentagon is ஐம் முடக்கி.

Hexangle or Hexagon is அறு முடக்கி.

Septangle or Septagon is எழு முடக்கி.

Octangle or Octagon is எண் முடக்கி.

Nonangle or Nonagon is ஒன்பான் முடக்கி or தொம்முடக்கி.

Decangle or Decagon is பதின் முடக்கி.

Dodecagon is பன்னிரு முடக்கி.

Polyangle or Polygon is பன் முடக்கி.

Equiangle is சரி முடக்கி.

Equiangle triangle is சரி மும்முடக்கி.

Rectangle literally means a figure which has all its angles right angles but geometrically it can only be a four angled figure and none else. Therefore the proper Tamil term is செம்முடக்கி; better still முழு முடக்கி. The number of angles need not be signified in the term at all, as a right angled figure cannot but have 4 angles.

Interior angle is உள் முடக்கு.

Exterior angle is புற முடக்கு,

Entrant angle is நுழை முடக்கு.

Re-entrant angle is உள் நுழை முடக்கு.

Equiangular is சரிமுடக்கிய.

Altitude is உயரம்.

Altitude of a triangle is மும்முடக்கி யுயரம்.

Alternate is ஒன்றுவிட்ட or இடைவிட்ட.

Alternate angle is இடைவிட்ட முடக்குகள், or ஒன்றுவிட்ட முடக்குகள்.

Corresponding is நிரலான and corresponding angles are நிரல் முடக்குகள்.

Vertex is நுனி or உச்சி.

Vertex of an angle முடக்கு நுனி

Vertical செங்குத்தான or நெட்டுக்குத்தான or நிமிர் of which the last நிமிர் is the best, being verbal and single rooted and it also conveys the sense of uprightness from bottom upwards exactly like the word vertical.

Vertical line is நிமிர் வரை.

Pendulam is தொங்கடம் or தொங்கட்டான்.

Perpendicular is தொங்கு or தூங்கு. The latter is better suited for scientific term and has the same sense as தொங்கு.

Perpendicular line is தூங்குவரை and it conveys the sense of reckoning from top to bottom but as perpendiculars are reckoned in any direction, not necessarily downwards. A more scientific term may be constructed in Tamil, The perpendicular being the shortest line from a given point to a given line or plane it may be generally called குறுவரை in Tamil in preference to தூங்குவரை reserving the latter for specific purposes only.

Opposite is எதிர்.

Opposite angles are எதிர் முடக்குகள்.

Arm is கை.

Arm of an angle is முடக்கின் கை.

Base is அடி.

Base of a triangle is மும்முடக்கி யடி.

Reflex is பின்முடங்க, பின்முடக்க.

Reflex angle is பின் முடக்கு.

Forward angle is முன் முடக்கு.

Regular used with reference to figures has got the same sense as முறை in Tamil.

Figure is வடிவம் or வடிவு. (*To be continued.*)

பா. வே. மாணிக்கம் நாயக்கர்,

பி. இ., எம். சி. ஐ., எம். ஐ. இ.

கிள்ளிவளவன்

(409-ஆம் பக்கத்தொடர்ச்சி)

இவ்வேந்தன் ஒரு காலத்தில் சேர மன்னன் ஒருவனோடு
போர் குறித்துச் சென்று கருவூரை முற்றுகை யிட்டான். சேர
னோ சோழனுடன் எதிர்த்துப்பொரும் துணிவிலனாய் மதில்வாயிலை
அடைத்துக்கொண்டு கோயிலின்கண் இனிதிருப்பானாயினன். முற்
றுகை நீட்டித்ததால் நகரிலுள்ள மக்கட்கு எத்துணைத் துன்ப
முண்டாமென்பது கூறவேண்டுவதின்று. இதனை அறிந்த ஆலத்
தூர் கிழார் என்னும் புலவர் கிள்ளிவளவனை அணுகி, ''சிலம்பினை
யும் சிறிய தொடியினையுமுடைய மகளிர் கழங்கு விளையாடும்
அணிமையையுடைய ஆன்பொருந்தத்தின் (அமராவதி ஆற்றின்)
மணல் சிதறும்படி காவல் மரங்களை வெட்டும் ஓசை தனது கோயிற்
கண்ணே சென்று ஒலிப்பவும், அவ்விடத்து மானமின்றி இனிதாக
விருந்த வேந்தனுடன் இவ்விடத்து நின் முரசமொலிப்பப் பொருதா
யென்பது கேட்டார் நாணுந் தன்மையையுடைத்து; அவனைக் கொல்
வாயாயினும், கொல்லாது விடுவாயாயினும் அவற்றால் நினக்கு வரும்
உயர்ச்சி யாம் சொல்லவேண்டா; நீயே எண்ணியறிவை'' என்றிங்
ஙனங் கூறிச்சந்து செய்து மீட்டனர்.

வெள்ளைக்குடிநாகனார் என்னும் புலவர் செவியறிவுறூஉவாக
இவ்வரசனைப்பாடிய பாட்டு மிகச் சிறந்தபொருள்களையுடையது.
''கடலை எல்லையாகவுடைய உலகத்தின் கண் குளிர்ந்த தமிழ் நாட்
டிற்குரிய முரசொலிக்கும் படையினையுடைய மூவேந்தருள்ளும்
அரசென்று சொல்லுதற்குச் சிறந்தது நின்னுடைய அரசே; ஞா
யிறு நான்கு திக்கினும் தோன்றினும், வெள்ளி தென்றிசைக்கட்
செல்லினும், அழகிய காவிரி பலகால்களால் ஓடி ஊட்டுதலால் தொ
குதி கொண்ட வேற்படையின் றோற்றம்போல் கரும்பின் வெளிய
பூக்கள் அசையும் நாடென்று சொல்லப்படுவது நின்னுடைய
நாடே; அந்நாடு பொருந்திய செல்வத்தையுடைய பெருமை பொ
ருந்திய அரசே,நினக்குரியவாகிய சிலகாரியஞ் சொல்லுவேன்;யான்
கூறுஞ் சிலவார்த்தைகளைக் கேட்பாயாக; அறக்கடவுள் வீற்றிருந்
து ஆட்சி புரிந்தாலொப்பச் செங்கோலால் ஆராய்தலையும், முறை
யினைக் கேட்கவேண்டுங் காலத்தில் எளிய செவ்வியையுமுடைய
அரசர் வேண்டும்பொழுதில் மழையினைப் பெற்றவாராவர், வானை

சூட்டிய பருந்த வெண் கொற்றக்குடை வெயிலை மறைத்தற்குக் கொண்டதோ வெனின், அன்று; வருந்திய குடிகளை நிழல் செய்தல் காரணத்தாற் கொள்ளப்பட்டது; வளவ, வருகின்ற மாற்றார் படையைப் பொறுத்து நின்று, அது புறங் கொடுத்தல் கண்டு ஆரவாரித்து நின் படை தருகின்ற வெற்றியும் உழுகின்ற கலப்பை நிலத்திலூன்றிய சாலிடத்து விளைந்த நெல்லினது பயனே; மழை பெய்யாதொழியினும், விளைவு குறைபடினும், இயல்பல்லாதன செயற்கையில் தோன்றினும் இவ்வுலகமானது காவலரைப் பழித்துரைக்கும்; அதனை நன்கு அறிந்தாயாயின், நீயும் குறளை கூறுவாரது உறுதியில்லா மொழியை மேற்கொள்ளாது ஏரினைப் பாதுகாக்கும் உழவர் குடியைப் பாதுகாத்து, அக்காவலால் ஏனைக்குடிகளையும் பாதுகாப்பாயாயின் நின் பகைவர் நின் அடியைப் போற்றுவர்" என்னுங் கருத்துக்களமைந்தது அப்பாட்டு. இதனைப் பாடிய நாகனார் தம்பால் இறுக்கலாற்றாதிருந்த பழைய நிலவரியாகிய கடனை விடுவித்துக் கொண்டனர். இங்கே காட்டிய இரண்டு மூன்று சான்றுகளிலிருந்து, இவ்வரசன் புலவராயினோர் கூறும் அறிவுரைகளைக் கேட்டு வழுக்களைந்து கோல் திருத்தி ஆண்டுவந்தனனென்பது விளங்காநிற்கும்.

இனி இவ்வேந்தனது செங்கோன்மையைப் புலப்படுத்தும் சான்று ஒன்று மணிமேகலைக் காப்பியத்திலுள்ளது. இவன் தன் மைந்தனாகிய உதயகுமரன் தவத்திறம் பூண்டிருந்த மணிமேகலையைக் காதலித்துக் காஞ்சனன் என்னும் விஞ்சையனால் வெட்டுண்டிறந்தனன் எனக் கேள்வியுற்றபோது, தன் அமைச்சனாகிய சோழிக ஏனாதியை நோக்கி, "யான் செய்யுந் தண்டனையைத் தான் செய்ததனால் விஞ்சையன் தவறுடையானல்லன்; தவத்தினோர் நோன்பும் மடந்தையர் கற்பும் அரசன் காவல் இல்லையாயின் இல்லையாம்; தன் மகன் மீது தேர்க்காலைச் செலுத்தி முறை செய்த வேந்தர் பெருமானது வழியில் ஒரு தீவினையாளன் பிறந்தானென்பதை மற்றை அரசர்கள் கேட்கு முன்னம் அவனைப் புறங்காடடைவித்து அக் கணிகை மகளையும் சிறைப்படுத்துக" என்றனன்; என்னும் பொருளுடைத்தாக

"யான் செயற்பால இளங்கோன் றன்னைத்
தான் செய்ததனாற் றகவிலன் விஞ்சையன்
மாதவர் நோன்பு மடவார் கற்பும்

காவலன் காவ லின்றெனி னின்றால்
மகனை முறைசெய்த மன்னவன் வழியோர்
துயர்வினை யாளன் றோன்றின னென்பது
வேந்தர் தஞ்செவி யுறுவதன் முன்னம்
ஈங்கிவன் றன்னையு மீமத் தேற்றிக்
கணிகை மகளையுங் காவல் செய்கென் றனன்
அணிகிளர் நெடுமுடி யரசாள் வேந்தென',

என்று தண்டமிழாசானாகிய சாத்தனாரால் அருளிச் செய்யப்பட்டுளது. இதில், தன்மகனிறந்ததற்குச் சிறிதும் வருந்துதலின்றி, மகனை முறை செய்த மன்னவன் வழியில் ஓர் தீவினையாளன் தோன்றினனென ஏனையரசர் கேள்வியுறுதற்கு முன்னே அவனை ஈமத்திலேற்றுக வென அரசன் பணித்தானெனக் கழறியிருப்பது அவ்வரசன் நீதியிலும், தன் குலப் பெருமையைப் பாதுகாத்தலிலும் எவ்வளவு பெரு நோக்குடையனென்பதனைப் புலப்படுத்தி நெஞ்சினையுருகச் செய்கின்றது.

பெருங் கொடையாளியாகிய சிறுகுடிகிழான் பண்ணன் என்பவன் இவ்வரசனுக்குச் சிறந்த நண்பனாவன். பண்ணன் மீது இவன் பாடிய புறப்பாட்டு இவனது செய்யுளியற்றும் செந்நாப் புலமையினையும், தன் நண்பரிடத்து இவனுக்கிருந்த கெழுதகையன்பினையும், விழுமிய மதிப்பினையும் நன்கு புலப்படுத்தாநிற்கும். அது,

"யான் வாழு நாளும் பண்ணன் வாழிய
பாணர் காண்கிவன் கடும்பின திடும்பை
யாணர்ப் பழுமரம் புள்ளிமிழ்ந் தன்ன
ஊணொலி யரவந் தானுங் கேட்கும்
பொய்யா வெழிலி பெய்விட நோக்கி
முட்டை கொண்டு வற்புலஞ் சேருஞ்
சிறுநுண் ணெறும்பின் சில்லொழுக் கேய்ப்பச்
சோறுடைக் கையர் வீற்றுவீற் றியங்கும்
இருங்கிளைச் சிறாஅர்க் காண்டுங் கண்டு
மற்று மற்றும் வினவுதுந் தெற்றெனப்
பசிப்பிணி மருத்துவ னில்லம்
அணித்தோ சேய்த்தோ கூறுமி னெமக்கே"

என்பது. இப்பாட்டிலே, பண்ணன் இல்லத்தில் புறாண் சுற்றம் ஊண் உண்ணுதலால் எழுகின்ற அரவத்திற்குப் பழுத்த மரத்திற் பறவைகள் கூடியொலிக்கும் ஒலியையும், அவன் இல்லத்தினின்றும் சோற்றினையுடைய கையினராய்ப் பாண்பிள்ளைகள் செல்லும்

ஒழுங்கிற்கு மழை பெய்யுங் காலத்தை நோக்கி முட்டைகொண்டு மேட்டு நிலத்தை யடையும் சிற்றெறும்புகளின் ஒழுங்கையும் உவமை கூறியிருப்பதும், பண்ணனைப் பசிப்பிணி மருத்துவன் என்றதும், யான் வாழுநாளையும் பெற்றுத்தான் வாழ்க என அவனை வாழ்த்தியதும் மிக்க வியப்பினையும் உவப்பினையும் விளைப்பனவாம்.

இங்ஙனம் வீரத்தினும், நீதியினும், வண்மையினும் மேம்பட்டுப் புலமைத்திறனும் வாய்ந்து, புலவர் கூறும் அறிவுரைகளைக் கேட்டு முறைபுரிந்து வந்த இவ்வரசர் பெருந்தகை சோணாட்டில் சேரர் மன்னனாகிய சேரனுடன் புரிந்த போரிலே உயிர்துறந்தானாவன் என்பது இவன் பெயருடன் இணைக்கப்பட்டு வழங்குகின்ற "குளமுற்றத்துத்துஞ்சிய' என்னும் அடையால் விளங்குகின்றது. இம்மன்னன் இறந்தமைக்காற்றாது புலவர்கள் பாடிய கையறு நிலைச் செய்யுட்கள் மிக்க உருக்க முடையன: "திண்ணிய தேரினையுடைய வளவனைக் கொண்ட கூற்றமானது தன் மனத்துள்ளே கறுவு கொண்டதாயினும், வெளிப்படநின்று வெகுண்டதாயினும், உற்று நின்று கையோடு மெய் தீண்டி வருந்திற்றாயினும் அஃது உய்யுமாறில்லை; ஆதலால் பாடுவாரைப் போலக் கையாற் றொழுது வாழ்த்தி இரந்து உயிர்கொண்டது நல்லவண்டும்' என்று மாறோகத்து நப்பசலையார்பாடினார், 'அன்பில்லாத கூற்றமே நீ மிகவும் பேதையாயிருக்கின்றாய்; சூழ்ச்சித் திறனில்லாமையால் மேல் விளைந்து பயன்படும் விதையைக் குத்தியுண்டாய்; நான் சொல்லிய வார்த்தை மெய்யாதலை இன்னமும் காண்பாய்; படைவீரரையும் யானையையும் குதிரையையும் எதிர்நின்று கொன்று நாடோறும் நின்பசி தீரும்படி உண்பித்த வசையில்லாத ஆற்றலையுடைய வளவனை நீ கொண்டாயாயின் இனி நின்பசியைத் தீர்ப்போர் யார் சொல்லுவாயாக" என்று ஆடுதுறை மாசாத்தனார் பாடினார். "கலம்வனையும் வேட்கோவே, கலம் வனையும் வேட்கோவே, புலவர் புகழ்ந்த பொய்யாத நல்ல புகழையுடைய செம்பியர் மரபினுள்ளானாகிய வளவன் தேவருலகத்தை யடைந்தானாகலான், அத்தன்மையோனைக் கவிக்கும் இடமகன்ற தாழியை வனைதலை நீ விரும்பினையாயின் இருநிலம் திகிரியாக மேரு மலை மண்ணாக வனைய இயலுமோ நினக்கு; இயலாமையின் என்ன வருத்தமுறுவாய்; நீ இரங்கத் தக்காய்;" என்று சுற்றத்தார் இரங்கிக் கூறுவதுபோல் ஐயூர் முடவனார் பாடினார்.

பண்டிதர் மு. வேங்கடசாமி நாட்டார்.

திருமுருகாற்றுப்படை.

(364—ஆம் பக்கத் தொடர்ச்சி)

இனி, இத்தகைய சிறப்புவாய்ந்த திருமுருகாற்றுப்படை தோன்றுவதற்குக் காரணமாகக் கூறப்படும் வரலாறுகள் திருப்பரங்கிரிப்புராணம், திருக்காளத்திப்புராணம் ஆகிய இரண்டு புராணங்களில் காணப்பெறுகின்றன. (நம்பியார் இயற்றிய திருவிளையாடற் புராணத்தில் இந்திரன் முடிமேல் வளை எறிந்த திருவிளையாடலில் நக்கீரர் திருமுருகாற்றுப்படை பாடிய வரலாறு காணப்படினும் அப்பாடல்கள் பிற்காலத்து வெள்ளி அம்பலத்தம்பிரான் என்பவரால் செருகப்பட்டன என்று அறிஞர்கள் கருதுகின்றதனால் அப்புராணத்தைக் குறித்து ஈண்டு யாதும் எழுதவில்லை).

திருப்பரங்கிரிப்புராணம் கூறுமாறு:—நக்கீரர் சிவபெருமானையும் பாண்டியனையும் தவிர வேறு யாவரையும் தாம் பாடுவதில்லை என்றிருப்ப இஃதுணர்ந்து முருகக் கடவுள் தன்னை நக்கீரர் பாட வேண்டும் என்னும் கருத்துடையராய் உக்கிரன் அண்டாபரணனை அழைத்து 'நக்கீரரை ஒரு குற்றம் கற்பித்து சிறைப்படுத்துக' எனப் பணித்தனர். நக்கீரர் சரவணப்பொய்கையில் சிவபூசை செய்யும் பொழுது முருகப்பிரானிட்ட பணியை மேற்கொண்ட அண்டாபரணன் அங்கிருந்த அரசமரத்தினின்று ஓர் இலையினைக் கிள்ளியிட அவ்விலையின் ஓர் பகுதி நீரினும் மற்றோர் பகுதி நிலத்தினுமாக விழுந்து முறையே மீனும் பறவையுமாக மாறி ஒன்றை ஒன்றிழுக்க, அதனைக்கண்ட நக்கீரர் இரக்கமேற்கொண்டு அவற்றைப்பற்றி நகத்தினாற் பிரித்துவிட்டனர், விடவே, அம்மீனும் பறவையும் வாய் பிளந்து குருதிகால இறந்தன. அண்டாபரணன் 'முருகப்பிரான் பரங்குன்றத்தில் கொலைப்பாதகம் புரிந்தனை' என்று நக்கீரரை எடுத்து அங்கிருந்த ஓர் மலைக்குகையில் அடைத்திட்டான். நக்கீரர் 'இது கந்தனைப் பாடாக்குறை' என்று கருதித் திருமுருகாற்றுப்படை பாடினர். அப்பாட்டின் இறுதி, கிழவோனே என்று முடிந்திருப்பது கண்டு முருகக்கடவுள் புலவரின் கனவிற்றோன்றி 'நீ நம்மைக் கிழவன் என்றமையான் நாம் கிழவனுய்வரப் பன்னாள் செல்ல வேண்டும்; என்று கூறி மறைந்தருளினர். பின்னர் நக்கீரர்,

குன்ற மெறிந்தாய் குரைகடலிற் சூர்தடிந்தாய்
புன்றலையப் பூதப் பொருபடையாய்—என்றும்

இளையாய் அழகியாய் ஏறூர்ந்தான் ஏறே
யுளையாயென் னுள்ளத் துறை''

என்னும் வெண்பாவாற்றுதித்தனர். இப்பாட்டில் இளையாய் என்று தன்னை அழைத்திருப்பது கண்டு முருகப்பிரான் மனமகிழ்ந்து தேவர்கள் புடைசூழ எழுந்தருளி நக்கீரரைச் சிறையினின்றும் விடுவித்தார். நக்கீரரும் வெளிப்போந்து மயிலேறும் பெருமானை வணங்கித் துதித்து திருமுருகாற்றுப் படையை அன்போடு ஓதுவார்க்கு வேண்டும் வரங்களை தந்தருளுமாறு வரம்பெற்று அப்பெருமானை நாடோறும் வழிபட்டு வருவாராயினர் என்பது.

திருக்காளத்திப் புராணம் கூறுமாறு:—

திருவாலவாயில் நக்கீரர், கபிலர், பரணர் முதலிய புலவர் நாற்பத்தெண்மரும் சோமசுந்தரக்கடவுள் அளித்த தெய்வமாப் பலகையில் இருந்து தமிழ் ஆராய்ந்து வந்தனர். இவர்களுடன் இறையனாரும் (கடவுளும்) ஒருவராகப் புலவர் நாற்பத்தொன்பதின்மர் ஆயினர். அந்நாள் மதுரைமாநகரில் அரசு செலுத்திய பாண்டியன் வங்கிய சூடாமணி என்பான் வசந்தகாலத்து மாலைப்போதில் தன் தேவியுடனே பொன்மயமான மாடத்தின் மேனிலையில் போது போக்குபவன் தென்றற்காற்றில் ஓர் நறுமணம்வீச அதனை புணர்ந்து 'இஃது எங்கிருந்து வருகின்றது' எனச் சிந்தித்துத் தன் மனைவியின் கூந்தலை நோக்கினன். நோக்குழி அன்னாள் கூந்தலினின்றும் அந் நறுமணம் உண்டாதல் கண்டு 'இவள் கூந்தற்கு இம்மணம் இயற்கையில் உளது போலும்' என மதித்து 'என் மனத்தில் உள்ள துண்பொருள் புலப்பட ஒரு செய்யுள் செய்பவல்லார் ஆயிரம் பொன் பெறுக,' என்று ஆயிரம் பொன் அடங்கிய கிழி ஒன்றைச் சங்கமண்டப முன்னர்த் தூக்குவித்தான். அதுகண்ட புலவர்கள் தாம் தாம் நினைந்தவாறு பாக்கள் புனைந்து மன்னனிடம் காட்ட அவைகள் அவன் கருத்துக் கொவ்வாதிருந்தமையின் பொற்கிழி அறுப்பவரின்றி இருந்தது. அக்காலத்து, இறைவனை அருச்சிக்கும் ஆதிசைவ மரபிற் பிறந்தோனாகிய தருமி என்பான் அப்பொழுது தோன்றியிருந்த வற்கடத்துக் கஞ்சி, வேறு தேசம் செல்லக்கருதி இறைவன் திருக்கோயிலை அடைந்து 'அருட்பெருங் கடலே! இவ் வற்கடம் என்னாலாற்றற் கரியதாயிருக்கின்றது; ஆகலின் யான் வேறு நாடு சென்று தங்கியிருந்து இந்நாடு செழித்தபின்னர் மீளுவேன்; விடைதரவேண்டும்,' எனத்தொழுதழுதான். இறைவனும் இது

கேட்டு 'அன்ப! நீ அழுது அங்குழையவேண்டா; பாண்டியன் தன் மனக்கருத்தறிந்து ஓர் செய்யுள் இயற்றவல்லார் அறுத்துக்கொள்ளு மாறு ஆயிரம் பொன் அடங்கிய கிழி ஒன்றைச் சங்கமண்டபத்தில் தூக்கியுள்ளான்; ஆகலின் யான் இயற்றித்தரும் இப்பாட்டை அர சற்குக் காட்டி அப்பொற்கிழியைப் பெற்று உன் வறுமைநோய்களைக் என்று,

"கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்
செறியெயிற் றரிவை கூந்தலின்
நறியவும் உளவோ நீயறியும் பூவே" என்னும் செய்யு

ளைக் கொடுத்தருளினர்.

[இச்செய்யுளின் பொருள்: மணத்தை ஆராய்ந்தறியும் வாழ்க் கையை யுடைய வண்டே! என்பால் உள்ள அன்புபற்றி ஒரு பக்கமா கப் பேசாது நீ கண்ட உண்மையை மொழிவாயாக, கணவன்மாட்டு இடையறாது பழகிய பயிற்சி பொருந்திய உண்மை நட்பினையும் (கற்பினையும்), மயிலினது சாயலினையும், நெருங்கிய பல்லினையும் (அழகையும்) உடைய பெண்ணினது கூந்தலினும் நறுமணம் வாய்ந்த பூக்கள் நீ அறிந்தவற்றில் உளவோ?]

உடன், தருமி கழிபேருவகை கொண்டு அரசன் முன் சென்று அச்செய்யுளைக் காட்டினன், பாண்டியனும் அது தன் மனக் கருத் துக்கொத்திருப்பது கண்டு மகிழ்ந்து "சங்கத்தார் முன் சென்று இச் செய்யுளைச் சொல்வாயாக" எனப் பணித்தனன். பணித்தலும் தருமி சங்கத்தாரிடம் சென்று இப்பாட்டினைச் சொல்ல, அவர்கள் அதன் கண் நிரம்பியுள்ள சொற்சுவை பொருட்சுவைகளைக் கண்டு வியந்து மகிழ்ந்தனர். ஆனால், புலவர் திலகமாகிய நக்கீரனார் மட்டும் 'இப் பாட்டில் குற்றம் உளது' எனக் கூறிவிட்டனர். அது கண்ட தருமி மனம் மிக வருந்தி ஆலவாயடிகளின் திருமுன் சென்று 'எம் பெருமானே! முழு முதற் பரம் பொருளாகிய நீர் இயற்றிய பாட்டி னுக்கு ஒரு புலவன் குற்றம் கூறினன்' என்றனன். எனலும், சோம சுந்தரக் கடவுள் ஓர் பாட்டியற் புலவனாகிப் பாவலர் தம்பாற் சென்று 'எமது கோட்டமில் கவிக்குக் குற்றம் கூறினர் யாவர்'? என்றார். என்ற வுடன் நக்கீரர் 'யான்' எனமொழிந்தனர். 'குற்றம் யாது?' என இறைவன் கேட்க, கீரனார் 'மகளிர் கூந்தற்கு மணம்செயற்கையன்றி

இயற்கையான் உண்டோ? இல்லது கூறலான் உமது செய்யுள் குற்ற முடைத்து,' என்றனர். எனினும், இறைவன் 'தெய்வமகளிர் கூந்தலின் மணம் இயல் பன்றோ?' என, நக்கீரர், 'தெய்வ மகளிர் கூந்தற்கும் மணம் செயற்கையே!' என்றனர். உடன், 'நீ வணங்கும் மலை மகளாகிய உமாதேவியாரின் கூந்தல் எத்தன்மைத்து?' என இறைவன் கேட்ச, 'உமாதேவியின் கூந்தலும் அத்தன்மைத்தே!' எனச்சிறிதும் அஞ்சாது மொழிந்தனர், நக்கீரனூர். உடன், எம்பெருமான் தமது நெற்றிக் கண்ணையும் சடையையும் காட்ட, அஞ்சா நெஞ்சு படைத்த புலவர் பெருமான் நீர் உடல் முழுதும் கண்ணாகக் காட்டினும் உமது பாடல் குற்ற முடையதே; சடைகொண்டு வெருட்டல் வேண்டா; யான் தோற்றிலேன்,' எனக் கூற, முற்றுணர் முதல்வராய இறைவன் 'எம்மொடு மாறுபட்டு உமையாளது கூந்தலினையும் பழித்துரைத்த நீ இம்மையிற் குட்டநோயுற்றலைக' , என்றனர். என்றலும், நக்கீரனூர் மெய் நடுங்கிக் கடவுளின் திரு அடிகளில் வீழ்ந்திறைஞ்சி 'எம் பெருமானே! கருணையங்கடலே! அடியேன் அறிவிலாது செய்த பிழை பொறுத்தருளிச் சாபப்பிணி கெட அருள்வாய்' என்றனர். அருட்கடலாகிய இறைவனும் சினந்தணிந்து "சென்று நீ கயிலை காணில் தீரும் இக் கொடுநோய்" என மொழிந்து கோயிலிற்புக்கு மறைந்தருளினர். தருமியும் பொற்கிழி பெற்றுச் சென்றனன்.

நக்கீரர், பரமசிவனது சாபப்பிணி உடலைப் போர்ப்ப 'இனி இதனைக் கயிலைகண்டொழிப்பேன், எனத் துணிந்து, சங்கப் புலவர் களையும் திருவாலவாயினையும் விட்டு நீங்க மனமில்லாதவராய் வருந் திப் பின்னர் அரிதின் நீங்கிச் சுரநெறி கடந்து புனல்நாடு புக்குப் பெண்ணையாற்றையும் பாலாற்றையும் தாண்டித் திருவேங்கடம் கண்டு ஏமகூடம் சென்று கங்கைபடிந்து காசியும் கேதாரமும் பணிந்து மனிதர்கள் செல்லுதற்கரிய வானுற நிவந்த இமயமலைச் சாரலிற் செல்லுவாராயினர். இன்னணம், உள்ளங்கால் வெள்ளெலும்பாக நடந்து கொண்டிருந்த அருந்தமிழ் நாவலர் வழியில் கடல் போன்ற தோர் தடாகத்தையும் அதன் கரையில் வானளாவியதோர் ஆலமரத் தினையும் கண்டு அவ் ஆலின்கீழ் மனனமர்ந்து வதிந்தனர்.

(தொடரும்)

திரிசிரபுரம் ம. பெரியசாமிப்பிள்ளை.

கௌரிசங்கரன்

(476–ஆம் பக்கத்தொடர்ச்சி)

சீடருளொருவர் :—குருமணியே! தாங்கள் பேசிவந்த சரீரங்களைப் பற்றிச் சற்று தெளிவாயெடுத்துரைப்பின் அடிமையின் ஏழை மதி யொருவாறு தேற்றமடையும். அறிவிலேனிழைத்த அபசாரம் பொறுத்தருளவேண்டும்,

வாலையானந்தர் :—அன்னணமேயாகுக. இக்காலத்து பூதிய ஆராய்ச்சி யுடையார் அபிப்பிராயப்படி ஒவ்வொரு பொருளும் வாயுத்தன்மை, திரவத்தன்மை, திடத்தன்மை என மூன்றவத்தைகளெய்தும். உதாரணமாகத் தண்ணீர் ஒன்றே திரவமாகவும், பனிக்கட்டியாங்கால் கெட்டியாகவும், நீராவியாம் போது வாயுவாகவும் மாறி நிற்றலைக்காண்மின். அன்னணமே உப்பு, சர்க்கரை, பொன், வெள்ளி யாதிய எல்லாப் பொருள்களும் வெவ்வேறு நிலைமைகளடைதல் யாவரு முணர்ந்ததே. அஃதேபோல் நிலம், நீர், வளி, கால் முதலாய பூதங்களும் சூக்கும நிலையோடிருக்குங்கால் அதாவது வாயுத்தன்மை யுற்றிருக்கையில் அவற்றாலாய தேகம் சூக்கும தேகமாம். அவை தடித்த நிலைமையிலுண்டாம் தேகம் தூல தேகமாம். வாயுவும் நன்காராயுமிடத்து தூலத்திற்கும் சூக்குமத்திற்கும் உள்ள வித்தியாசத்தைத்தன் நிலைபேதத்திலடையாநின்றது. நம்மீது தாக்கும் தூல வாயுவினும் மிகச்சூக்கும வாயுக்களெல்லாம் உளவாதல். இராசயன சாத்திரப் பயிற்சியுடையார் அறிந்ததேயாகும். ஆகையால் சூக்கும தேகமுண்டாதற்கு ஏதுவாய் நின்ற சூக்குமபூதங்கள்தாமும் மிகச் சூக்குமமாய் மாறுநின்றன. இன்னணம் ஒன்றற்கொன்று சூக்குமமான நிலைகளை ஐம்பூதங்களுமடைய அவ்வப்போது அவற்றாலாய சரீரம் ஒன்றினும் ஒன்று சூக்குமமாகவே யிருக்கும். ஆகவே சூக்கும சரீரம் காமரூபமாயுள்ளது. குணசரீரம் எண்ணரூபமாயுள்ளது. கஞ்சுக சரீரம் புத்தி ரூபமாயமைந்துள்ளது. அதன் மேலுள்ள காரண சரீரம் நடுநிலை குன்றா பிரஞ்ஞா ரூபமாயமைந்துள்ளது. உண்மையில் ஆன்மாவிருக்கும் தானம் அதுவேயாம்.

இச்சரீரங்கள் ஒன்றோடொன்று தொடர்புடையதாகவே இருக்கும். இவைகளில் ஒவ்வொன்றும் ஒவ்வொன்றினூடேயும் புறம்பேயும்

வியாபித்திருக்கும். அதாவது தூலதேகத்தினுள்ளும் புறமும் சூக்குமதேகம் வியாபித்திருக்கும்; சூக்குமதேகத்தினுள்ளும் புறமும் காரணசரீரம் வியாபித்திருக்கும்; அதனுள்ளேயும் புறம்பேயும் கஞ்சுக சரீரம் வியாபித்திருக்கும், இன்னணமே மற்றையதுமாம். இவ்வியாபக நிலை எதுபோலுமெனின்: சர்க்கரையைச் சுத்த நீரிற் கரைத்து அதிலொரு நூலாடையைத் தோய்த்தால் நீரானது நூலினுள்ளும் வெளியிலும் வியாபித்து நிற்குமன்றோ? அந்நீரினுள் வியாபித்த சர்க்கரை நூலினுள்ளிருக்கும் நீரிலும், அதன் மேலிருக்கும் நீரிலும் கலந்து நிற்கும். இவையெல்லாஞ் சேர்ந்து ஆடையினுள்ளும் புறமும் நிறைந்து நிலவும் நிலைபோலென்க. புவர், சுவர் முதலாய உலகங்களும் பூவுலகினில் நுண்ணிய திரவியங்களாலாய சூக்கும உலகங்களேயாம். ஆதலினன்றே அவை பிருதிவி தத்துவ புவனங்களின் பாற்பட்ட உலகங்களாயினவு மென்க.

மேற்கூறிய சரீரங்கள் அவையிற்றினுக் குள்ளும் புறமும் வியாபித்திருப்பினும் தவத்துறைபோய சீரியர் அவற்றைத் தூல சரீரத்தினின்றும் பிரித்து அவை தமக்குள் பகுத்தறிவோடிருந்து சூக்கும உலகங்களினுஞ் சென்றுலாய் வருவர் கண்டீர். இது நிற்க நும்மாசங்கை யொழிந்ததா? இனி விரிப்பிற் பெருகுமாகலானும் சங்கமனுடன் வசனிக்க வேண்டியிருத்தலினானும், இன்றிவ்வளவோடு அமைவீர்களாக. அமயம் நேர்ந்துழி விரித்து விளம்புவாம்," என்று சொல்லி முடித்தனர் வள்ளலாரும்.

இன்னணம் காலைப்பாடம் முடிந்தமேல் எல்லாம் வல்ல இறைவனை நினைந்து அவணிருந்த யாவரும் சிறிதுபோது மனமொழி மெய்யொருங்கி தியானத்திருந்தனர். அவணிருந்தவருள் எவர் முகத்தை நோக்கினும் ஆனந்தவொளி வீசா நின்றது. ஆண்டிருந்த துறவிகளிலெவரும், இக்காலத்துக் காவியுடுத்தி, கள்ளுடன் கஞ்சா கலந்துகுடித்து எல்லாம் பிரமம், குடிப்பதும் பிரமம், குடிக்கப்படுவதும் பிரமம், குடிக்கக்கொடுப்பதுவும் பிரமம், நாவுலர்ந்து ஓலமிடுவதும் பிரமம், கீழ்கிடந்து புரளுவதும் பிரமம் என்றும், இந்த நாய்க்கு தாகசாந்திக் கேதேனும் உதவுக அப்பேன், அல்லது பயலே" என்று வீண்வார்த்தைகள் வழங்கி "கோயிலேதடா? குளங்களேதடா? நட்டகல்லைத் தெய்வமென்று நாலு புட்பஞ்சாத்துறீர், நட்டகல்லும் பேசுமோ நாதனுள்ளிருக்கையில்" என்றும் பரமாத்துவித பரமோத்தமர்தம் பாடல்களையெல்லாம் வாய்க்கு வந்தபடி பிதற்றி தூயநெறியொழுகும் துறவி

களுக்கும் அவமானம் விளைவித்துத்திரிதரும் நம் தெருச்சாமிகளைப் போன்றிருந்தனரில்லை. இக்காலப் போலிவேதாந்திகள் தெருப் பிரசங்கம் உலகத்தவர்க்கு யாது பயன் விளைத்திடும் உலகீர்? பார்த்தவற்றெல்லாம் பரமனையேகண்ட மணிவாசகரனைய இருவினையொத்த அதாவது விருப்பு வெறுப்பற்ற தவச்செல்வர்கள் தமக்குள்ளும், தம்மையொத்தார்தம் குழாத்துள்ளும் சொல்லி யானந்திப்பதன்றோ அத்துவிதம். சனகாதி நால்வர்க்கும் வடவாலமர்ந் துபதேசித்த குருமணிகளுங்கூட வாயால் வேதாந்தம் பேசாது மோனம் பூண்டு முத்திரையினால் உண்மை காட்டினரே. சரியை, கிரியையற்ற பாமரர் தமக்கு வேதாந்தப்படிப்பேன்? உலகத்திற் கொருவாற்றானும் உதவாத மாந்தர்தமக்கும் வைதிகமார்க்கமென்ன பயன்தரும்" உலகத்துக் கபடமற்ற மாந்தரை மயக்கிப் பணம் பறித்து, தாசிகளுக்கும் வேசிகளுக்கும் மதுவிற்பார்க்கும் மாமிசங் கொடுப்பார்க்கும் அளித்து மகிழ்ந்து திரிதருதற்கே இவரும் இவர் போன்றாரும் வேதாந்தம் படிப்பது. இதுகிடக்க.

சிறிது போதினில் எல்லோருங் கண்விழித்தனர். விழித்தமேல் முதற்கண் திருஞானசம்பந்தர் தேவாரமும், பிறகு திருநாவுக்கரையர் திருத்தாண்டகமும், அதன்மேல் வன்றொண்டப் பெருமான் திருவருட்பாவாம் திருமந்திரமும், இறுதியில் தம்பொருட்டுச் சிவபரஞ்சுடரே குதிரை விற்கவும், மண் சுமக்கவுந் தென்னவன் கைப் பிரம்படிப்படவும் வைத்த பெருந்தகையாரது தேனினுமினிய திருவாசகமும் இன்னிசையோடு கேட்டார் அகங்குழைந்து, மயிர்க்கூச்செறிந்து, கண்ணீர் துளிக்குமாறு பாடி முடித்தனர். பிறகு அவரவரும் தனித்தனியே பற்பல புத்தகங்களைக் கரங்கொண்டு ஒவ்வோரிடத்தமர்ந்து ஓதுவான் றொடங்கினர். அவ்விடத்தையே இடம் விட்டகலாது எஞ்சியிருந்தவர் அருளமுதமாந்திய வாலையானந்தரும் நமது சங்கரனுமே யாவர்.

அப்பொழுதத்து வள்ளலார் சங்கரனைப்பார்த்து, "செல்வ! நின்னெழின்முகம் அளவிலாக்கவலையால் களங்கமுற்றதெவன்? நின்னையிதுசாறும் இவ்வாறு கண்டதில்லையே. நினக்கென்னுற்றதெந்தாய்? நின்னாற்றலுக்கரியது மொன்றுண்டோ? உற்றதுரைமின். எம்பாலொன்று மொளியற்க. எம்போலியர் உலகத்திருத்தல் நின்னுவகை யொன்றன் பொருட்டன்றோ. எந்தமக்கென யாம் யாதும் யாண்டும் வேண்டுவதுண்டு கொல்? நின்பெரும்புகழ் இந்நிலவுலகிற் கூறற்கமை

ந்த நின்னன்பரன்றோ யாங்கள்? எமக்கொன்றனை நீயொளித்தலுந் தருமோ?

ஆஹா! காதல்மணம் நினக்கு முண்டாயது? இறும்பூதே யிது! நின்னை மயக்கிய பொற்கொடியு மொருவளுண்டுகொல்?" என்றினை யவும் பிறவுங்கேளா நின்றனர். அப்போழ்தத்து சங்கான் வெய்து யிர்த்து "நாத! யானிவ்வுலகத்தின்கண் இருத்தலினும் இல்லாமை நன்று. துன்பமொன்றுணராத் தமியேனும் இக்கொடுந்துன்பத்துள் உழல வேண்டியதாயது. என்னால் சகித்தற்கில்லை. எனது பெபரையே யருவருக்குங் குலத்திற்கிளைத்த கொம்பனாள் தன்னை விக்கோல மெய்தினேன். "வேயே திரண்மென்றோள், வில்லே கொடும்புருவம், வாயே வளர்பவளம் மாங்களிரே மாபேனி", என்னும் இலக்கணை நிறைந்த அவளுமென்னையே மனத்துள் நிறுத்தினள். இதற்கென் செய்குவல் யானும் பருப்பதத்த னுருயிருள்ளளவும் அவர் தம் பாவையை அணுகமுடியுமோ! அன்றியவரை யான் கோறலு முறையோ' இத்தகைய சங்கடம் யாவரே யுற்றார்? இந்நிலையிலுள்ள யானி றப்பவும் வழியுணரேன். இல்லறத்தைக்குறுகுவான் எண்ணுமப்போதே இத்தகைய கவலைக்கடலுண் மூழ்க நேர்ந்ததே' இல்லறமே யண்மினேனாயின் எத்தகைய துன்பத்திற்காளாவேனோ! இறைவ! இம் மனையறம் விரும்புகின்றிலேன். தாங்கள் புனைந்த துறவறமே இன்பந்தருவது எட்டுணையுமின்று. ஆகலான் இச்செல்வமும் வேண்டேன். சிறப்பும் வேண்டேன். மங்கையும் வேண்டேன். மாநிலம் வேண்டேன். தங்குடிலே யெனக்கிசைந்த கோவிலாங்கண்டீர்.

"மறுவற மனையினீங்கி மாதவஞ் செய்வலென்றூற்
பிறவறமல்ல பேசார் பேரறிவுடைய நீரார்". ஆகலான்,

யானுந்துறவு புணர்வல். ஆட்கொள்ளு மண்ணால் யான்..............

என்று இன்னுமென்னவோ சொல்வானெழுந்த காலையை நந்தம் அருளாளர் வாலையானந்தர் மோனமுறுவித்துப் பின்வருமாறு வசனிக்கலாயினர்.

"இனையை நீயாயதெல்லாம் எம்மனோர் செய்த பாவம், நினை யல் நீ நம்பி! துன்பமுற்றவர்க்கலாலின்பமில்லை" ஆதலின், நீ யளப் பருஞ் சுகமடைதற்கே இத்துணைத்துன்புற்றனை துன்பமினைத்தென வறியா மாந்தர் இன்பத்தின் சுவையினைத்தென அறியார். ஆதலான் அன்ப! நீ கலங்கலை. அன்றியும்,

"இடுக்கண்வந் துற்றகாலை யெரிகின்ற விளக்குப்போல்
நடுக்கமொன் றானுமின்றி நகுகதா னக்கபோழ்தவ்
விடுக்கணை யரியுமெஃகாம் இருந்தழுதி யாவருய்ந்தார்
வடுப்படுத் தென்னையாண்மை வருபவந் துறங்களன்றே"

"ஆடகச் செம்பொற் கிண்ணத் தேந்திய வலங்கற் றெண்ணீர்
கூடகங் கொண்ட வாழ்நா ளுலந்ததேற் கொல்லும் பவ்வத்
தூடகம் புக்கு முந்நீ ரூழ்ந்தினு முய்வர் நல்லார்
பாடகம் போலச் சூழ்ந்த பழவினைப் பயத்தின்"............

"வினையது விளைவின் வந்த வீவருந் துன்ப முன்னீர்க்
கனைகட லழுவ நீந்திக் கண்கனிந் திரங்கல் வேண்டா
நனைமலர்ப் பிண்டிநாதன லங்கிளர்ப் பாத மூல
நினையுமி னீவிரெல்லா நீங்குமி னச்சம்"....................

என்றான் சீதத்தனுமாகலான் துயரொழிமின். இடுக்கணிலலக்கழி யாததீரர் எக்காலத்துந் துன்புறாது இன்பமே எய்துவர். நடுக்கடலிற் காற்றலைப்பக்கலங்கிய தோழரனைவரும் கடலுளாழ, அத்தருணத் தே சற்றும் பலையாத சீதத்தனொருவனே ஆழியினுளாழாது எஞ்சியின்புற்றனன். ஆகலின், "சுகமுறுங்காலை ஈசன்றிருவருளாலீதெ மக்கெய்தியது" என அவன் திருவடியிறைஞ்சுக துன்பமுற்றிடின் நம்பழவினையே நமக்கிக்காலத் தின்ன தீமையை யியற்றா நின்றது. என நினைமின். "நினைத்து, அதனை யுப்பக்கங் காண முயலுமின். நம் வினையால் வந்தது நம் வினையால் கழிந்திடும், முயற்சியாலாகாத தொன்றில்லை கண்டாய். அறியாமைக்குக் குடிலாய் நிற்கும் மடிகள் மானிட தேகம்பெற்றும் விலங்குகளேயாவர். நம்போன்ற மாந்தர் எக்காலத்தும் முயற்சியிற் குன்றுதலழகன்று. "மடியுளாள் மாமுகடி யென்பமடியிலான் தாளுளாடா மறையினள்". "இன்பம் விழையான் வினைவிழைவான் றன்கேளிர் துன்பந்துடைத்தூன் றுந்தூண்". எனத் திருவள்ளுவரும், "உள்ளமுடையான் முயற்சி செய்ய" எனத் திருத்தக்கதேவரும் கூறிப் போந்தமையின் நீயுன் றீவினைக் கெடுத் தற்குத் தக்க நெறியினை நேடுமின்.

நின்போன்றார் துறவு விழைதல் நீதியோ? அவரவர் நிலைமை யினுக்கேற்ப உலகத்திற் குழைத்தலை விடுத்து அவாடைந்தில்லாத வேறு நிலையை நாடல் பேதையர் செயல்காண். உலகமாம் மேதக்க

ஒரு புருடனுக்கு அவயவங்களாம் நாம் இயற்றுந் தொழிற்களுள் எது உயர்ந்தது? எது இழிந்தது? மனத்தின்கண் மாசிலனாய்த் தன் நிலைமைக்கேற்பவற்றை இறைவன் றிருவருளிதோமென நினைத்து நாமியற்றுவனவற்றை அவற்கே யர்ப்பணமாயியற்றின் அதன்றோ கருணைகான் கருத்துக் கிசைந்ததோர் நெறியாம். இதனையே எம்மண்ணலாய கண்ணனும் தமது கீதையின் கண் கூறு நின்றனன். உலகந் தோன்றி நின்றழிதல் ஈசன் கருணைக் குணத்தாலன்றோ? உலகத்து நடைபெறுந் தொழிற்களுள் ஒவ்வொன்றும் உலகத்திற் கின்றியமையாததேயாம். இறைவனே யன்புகாட்டி யியற்றும் வினைகளில் நாம் வெறுப்படைதல் அறிவின்மையின்பாற் படுமன்றே. உண்மையில் மனையறத்தின் மாண்பறியாது அதனை நடத்த வலியும் மதியுமில்லாத மாந்தரே வேறியலாமையின் துறவு புணர்வர். பொருளீட்டி யதனைத்தானுகர்ந்து நல்லாற்றிற் செலவிடவழியறியா அநேகர் தமக்கு அவற்றைக்கற்பித்து அவர்தம்மைப் புரத்தல் நின்போன்றார் கடனன்றோ? இல்வாழ்வாரில்லாக்கால் யாங்களென்னணம் எத்தொழிலியற்றுவோம்? "துறந்தார்க்குந் துவ்வாதவர்க்கு மிறந்தார்க்கு—மில்வாழ்வானென்பான்றுணை," "இல்வாழ் வானென்பானியல்புடைய மூவர்க்கு நல்லாற்றினின்ற துணை," என்று கூறிய பொய்யில் புலவர்தங்கருத்தினைபுணர்மின். "அறத்தாற்றி னில்வாழ்க்கையாற்றிற் புறத்தாற்றிற் — போஒய்ப் பெறுவதெவன்?" "இயல்பினா னில்வாழ்க்கை வாழ்பவ னென்பான் — முயல்வாருளெல்லாந்தலை." என்னும் திருப்பனுவல்களீண்டுக் கவனிக்கற்பாலன. கன்ம மூட்டையைக் கரைத்தற்கு எது நெறியோ அந் நெறியிலிறைவன் நம்மைக் கொணர்ந்து விட்டிருக்க அம்மேலாம் நெறியினைத்துறந்து மற்றோர் நெறியினை நாடல் பாற்கடலுட் பிறந்து அதனுள் வாழுமீன்கள் அப்பாலை விரும்பாது வேறு பலவற்றை விரும்புதல் போலாம். உலகத்திற்கு வேறொன்றானுதவ வியலாத எம்போன்றாரன்றோ துறவு புணர்வர். வள்ளால்! நீ மட்டும் நின் றிருவை வெறுத்துத் துறவு பூணவொருப்படின் இறைவனே காதலிக்குந் திருவை நீ யிகழ்ந்தாயாதி. நீ யிகழ்தற்கஞ்சி அன்னளிரி தருவளாயின் அவனுமிரிவன்.

இத்துணை விரைவில் நின்மனத்தை இன்னணஞ் சிதறவிடல் நின்போன்ற மேதக்கமாண்புடையார்க் கேலாது. வதிஷ்டர், அகஸ்தியர், வள்ளுவர், கோதமர்முதலாய பெரியோரெல்லாம் இல்லறம்

வெறுத்துத் துறந்தனரில்லையே. தெய்வ சங்கற்பத்தினுக்கு மாறுபட நடத்தல் மும்முறையுஞ் சாலாதுகாண். உனக்கு யானதிகம் சொல்லவும் வேண்டுமோ? தனித்திருந்து ஆழ்ந்து சிந்தித்து நல்லாறென நினக்குத்தோன்றும் வழியில் நின்று முயனுதி. நின்னளப்பருமாற்றலை மறந்து நிற்கின்றாய். உனக்கு எவ்வெவ் வமயங்களில் என்னுதவி வேண்டுமோ அப்போழ்தத்தெல்லாம் நின்னவாவின்படி நடப்பேன். அஞ்சற்க. என்று வாலைபானந்தர் சொல்லியமர்ந்தனர்.

இவையிற்றினைச் செவியுற்ற சங்கரன் ஒருவாறு தேற்றமடைந்து "அடிகள் பணித்ததனையே சிரங்கொடு செய்வது என்றன் கடமையாகலான், நின் றிருவுளப்படியே யாகுக" என்றனன். என்றமேல் எழுந்து 'அடிகாள்! சென்றுமீளுவல்; உத்திரவிடுக" என்று புகன்று எட்டு உறுப்பும் நிலத்துறும்படி விழுந்து தொழுதெழுந்தான். எழுந்த செம்மலுக்காசி வழங்கி "சென்றுமீண்டெய்துக", என்றார் வள்ளலாரும் அவனும் ஞெரேலென வெளிப்போந்தனன்'.

போந்தவன் இனி யான் வாளாவிருப்பது இடர்ப்பாட்டினையெய்துவிக்கும். ஆதலின் யான் என்னாலியன்றவளவு உறுதி பயப்பக்கடைப்போகும் மட்டும் முயலா நிற்பேன்" என்று தனக்குண்மொழிந்தனனாய்க் குடதிசை நோக்கி நடக்கலுற்றான். அப்போழ்தத்துக் கதிரவன் தன் பொன்னவிர் கிரணங்களை மெல்லென வோச்சினன். புறஞ்சிறைப் பொழிலும் பிறங்குநீர்ப்பண்ணையும் இறங்கு கதிர்க்கழனியும் புள்ளெழுந்தார்த்தன. மறைபவருட்சில்லோர் இருக்கினும் யசுவினும் சந்தை சொல்ல புக்கனர்; வேறு சிலர் சாமகீதம் பாடினர். அறத்துறைபடிந்து மறத்துறை விளங்கிப் புறத்துறை மேம்பட்டோங்கிய வீரசேகரச் சோழன்றன் கோயிலினும், கோட்டையின் நாற்புற வாயிலினும் வால் வெண்சங்கொடு வகைபெற்றோங்கிய காலைமுரசங் கனைகுரலியம்பிற்று. நந்தனவனத்து நாண்மலர்கள் பொதியவிழ்ந்து நறுமணம் வீசின. பொய்கையாம் பூவையும் வண்டர் பாண் செய்து பள்ளியெழுச்சி பாடத் தாமரைக் கண் விழித்தனள். பாடுநர் பாடினர். ஆடுநர் ஆடினர். களிறுகள் பிளிறின. கனைத்தன புரவிகள். வீரர்கள் படைக்கலம் பயின்றனர். வைதிக வேதியர் மந்திரம் புகன்று வடவாற்றில் நீராடப்புக்கனர். சிவகங்கைக் குளத்தின் றெண்ணீர் கொணர்வான் கட்டழகமைந்த கன்னியர் பலரும், மங்கலம் புனைந்த

மாதர்கள் பலரும், விதவைகள் பலரும், விருத்தைகள் பலருங் கூட்டங் கூட்டமாய்க் குழூஉவுபு சென்றனர். அவர் தம்முள் நம்மின்பக் குரிசிலைக் கண்டுகொண்டு கண்ட மகளிர் தம்முள் ஒருத்தி "மான் மழுவேந்திய மன்றபவர் காய்ந்தெரித்த காமனே மீட்டுந்தவம் புரிந்து முன்னையிற் காட்டின் மிகநல்லுருக் கொண்டு வந்தனன் போலும்" என்றாள். மற்றொருத்தி "மோகினி யுருக்கொடு தாருகவனத்து இருடியாரையுஞ் சுராசுரரையும் மயக்கிய மாலே யின்று இவ்வயின் ஆண் மோகனவுருக்கொடு மங்கையரை மயக்குவான் வந்தனனேயோ!" என்றாள். வேறொருத்தி "அசுரர்வேரறுத்த வெம் மண்ணலாஞ் செவ்வேள் தேவசேனையாரையும், வள்ளிபம்மையாரையும் மணந்து கொண்டதுடனமையாது வேறு யாவளை மணந்து கொள்ள இஞ்ஞான்றிவ்வுருக்கொடு இவ்வுலகத்துப் போந்தனனோ!" என்றாள். "இவ்வெழிலுடையானுக்குத் தக்க நலனுடையாள் நம் பருப்பதத்தனார் தம் மகளே யாவள்" என்றாள் ஒரு விருத்தை.

இன்னணம் சங்கரன், மகளிர் தம்மனத்தின்கண் பல்வகைய வெண்ணங்களை யெழுவித்து அவர் தம் வதனமதிபூத்த பூங்குவளைக் காட்டிடையே போய் தன் சித்திரமண்டபம் புகுந்தான். புகுதலும் இவன்றன் வரவை எதிர்நோக்கியிருந்த ஒருவன் வெகு விரைவினில் திரும்பியோடி, நுதல்விழி நாட்டத்திறைவர் பாலணுகி "நம்மிளந் தோன்றல் இதோ மண்டபத்திற்கு வந்தனர்" என்றான். இறைவரும்" அற்றாயின் காலையுண்டி சித்தஞ்செய்" என்றார். அவனும் "எல்லாந் தயாராயது" என்று சொல்லி வேறொருவனை விளித்தான். வந்தவனும் ஆண்டுள்ள உவளகத்துத் துகள் சீத்தான். மற்றொருவன் நீர் தெளித்தான். மூன்றாவன் தலைவாழையிலை பல கொடுவந்து முறை யினிட்டகன்றனன். நான்காவன் பல்வகைய சிற்றுண்டியும் படைத்தனன். மற்றொருவன் மலர்தலைப் பொற்கலத்தினிற் பருகுதற்குரிய இன்னில நீர் வைத்தகன்றனன். கடிகாயந்திரம் எண்முறையார்த்தது. உடனே சங்கரனும் ஆயிடை வந்தனன். அவன் வரவும் அவன்றன் தாதையார் "செல்வ! வருக; சீரிய வருக. இதுகாறுமெங்குற்றனை? உலாய் வருதற்கு ஒருவனாய்ச் செல்லல் நின்வழக்கன்றே" என்று மொழிந்துகொண்டே எதிரோடினர். அதற்குள் நஞ்செம்மலும் அட்டாங்கமாய் அவரடிமிசைப் பணிந்தனன். அவருமிவனை யிருகரங் கொடு தைவந்து ஆசீர்வதித்துத் தூக்கி மார்புறத் தழீஇ போஜன சாலை புக்கனர். (தொடரும்) காரைக்கால் அ. நாராயணன்.

சரவணபவர் பிரபாவம்

அல்லது

முருகர் திருவிளையாடல்கள்

(484-ம் பக்கத்தொடர்ச்சி)

தோமரம், தவசம், குலிசம், அங்குசம், அம்பு, பங்கயம், மணி, மழு, தண்டு, வாள், வில் என்னும் பதினோராயுதங்களும் பதினொரு உருத்திரர்களே யென்றும், சிவசத்தியே வேலாயுதம் என்றும் கந்தபுராணங் கூறுகிறது. மற்றைய ஆயுதங்களைப்போல், அது அஞ்ஞான சம்பந்தமானதன்று; மெய்ஞ்ஞான சம்பந்தமுடையது. பராசத்தி பரம்பரனே என்று பேதமின்றிச் சொல்வதுபோல, வேலாயுதம் கந்தவேளின் வேறன்று என்று விளக்கமாய்க் கூறலாம்.

இன்னும், அந்தச் சத்திவேல் வேறெந்தப் படையானும் அழியாது; அது வொன்றே பல்லுருவுங்கொண்டு பகைவென்றது. பானுகோபன், சிங்கமுகன், என்பவருடைய மாயாஸ்திரங்களால் கட்டுண்ட வீரவாகுதேவர் முதலியோருடைய பாசங்களை அறுத்து நாசம் பண்ணினதனால், பாசம் அறுக்கவல்ல அதன் ஆற்றல் நன்கு விளங்கும்.

இப்படிப்பட்ட வேலாயுதத்தைத் தமது வலது திருக்கரத்தில் தரித்திருப்பார் நமது சுப்பிரமணியக் கடவுள்; தமது இடது திருக்கரத்தை இடுப்பில் ஊன்றி, ஒரு திருமுகம் இரு பெருந்திருவிழிகளை யுடையாராய்க் கோடி சூரியப் பிரகாசம் போன்ற பேரொளியோடு வீற்றிருந்தருள்வார்: அப்போது அவரை, தேவரும் வித்தியாதரர் முதலிய யாவரும் சூழ்ந்து சேவிப்பார்கள். ஜீவராசிகளாம் அவர்களுடைய பாச பந்தங்களை அறுத்துத் திருவருள் புரிவதே அவருடைய திருநோக்கமாகும். அதற்காகவே அவர் இத்தனை சிறப்பினதாகிய ஞானசத்திவேலைத் தமது வலது திருக்கரத்தில் தாங்கி விளங்குகின்றார். ஞானசத்தியைத் தரித்திருப்பதனால், அவர்க்கு ஞானசத்திதரன், ஞானசத்தி ஆத்மா என்னும் திருப்பெயர்கள் வழங்குகின்றன.

இச்சா ஞானக் கிரியையெனு மிவைமுன்
றிலையார்க் கிளைத்தெழுந்திட்
டச்சானுழி யறச்சுவற்று பயில்வே
லொருகை வலத்தமைத்து

நச்சாதவரை தெறுமாறுகை
நளினங்குறங் கிணைமைத்திமையோர்
விச்சாதரர்சூழ் ஞானசத்தி
தானதுருவ மமைப்போகும்.

(தணிகைப்புராணம்,

(மூன்றாவது)

*தாரகாந்தக மூர்த்தி.

அனேகம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தி, தாரகன் என்பவன் அசுரர்களுக்கு அரசனாயிருந்தான். அவன், பிரமனைநோக்கிக் கடுந் தவஞ் செய்ததனால், அவனுக்கவர் காட்சிதந்தார். அப்போதவன் அவரிடத்தில் அநேக வரங்களைப்பெற்று, மூவுலகிலுள்ளார் யாவரையும் வென்று, தனக்கு அடிமைகளாக்கிக்கொண்டு அரசு செலுத்தினான். அன்றியும் அவன் சிவபெருமான் கிருபையால் மூன்று புதல்வர்களைப் பெற்றான். அவர்கள் மும்மூர்த்திகளையும் வெல்ல வல்லவர்கள். திருமாலையும் வென்று, தன்னை எதிர்ப்பவர் யாருமின்றி விஞ்சியிருந்தான். ஆகையால், அவனுக்குத் தாரகன் என்பது காரணப் பெயர், (தாரகம்=கடத்தல்=விஞ்சுதல்.) ஆம்; அவன் யாரையும் அஞ்சினான் இல்லை; தவ வலிமையால் விஞ்சினான். ஆகையால், தாரகாக்கன், கமலாக்கன், வித்துன்மாலி யென்னும் தன்மைந்தர் மூவரையும் நோக்கி, "ஏ, மைந்தர்காள்! இப்படி நான் உயர்நிலையில் இருப்பதற்கு என் தவமே காரணம். 'தவமுந் தவமுடையார்க்காகும், அவமதனை அஃதிலார் மேற்கொள்வது' என்றபடி தவத்தைவிடச் சிறந்தபொருள் வேறு ஒன்று இன்று, அதனால் நாம் அடையாத நன்மையில்லை. ஆகையால் நீவிர்,

'காலைச்செய் வோமென் றறத்தைக் கடைப்பிடித்துச்
சாலச்செய் வாரே தலைப்படுவர்—மாலைக்
கிடந்தான் எழுதல் அரிதான்மற் றென்கொல்
அறங்காலை செய்யாத வாறு',

என்றபடி

இந்த இளமையிலேயே வர வளமை பெறும் பொருட்டு அறமாகிய தவத்தைச் செய்யுங்கள், முதுமையில் உங்களால் ஒன்றும் முடியாது; பிணி, மூப்புச் சாக்காடுகள் உங்களை ஒன்றுஞ் செய்யவொட்டா. ஆகையால்,

---

*இந்தத்தாரகன் சூரபன்மன் தம்பி அன்று; திரிபுரத்து அசுரர்க்குத் தகப்பன்.

"ஒன்றே செய்யவும் வேண்டும், ஒன்றும்
நன்றே செய்யவும் வேண்டும், நன்றும்
இன்றே செய்யவும் வேண்டும், இன்றும்
இன்னே செய்யவும் வேண்டும், இன்னும்
நாளை நாளை என்பீராகில்
நமனுடை முறை நாளாவதும் அறியீர்
நம்முடை முறை நாளாவதும் அறியீர்"

என்றபடி காலத்தைக்கழிக்காமல் இப்போதே செல்லுங்கள்" என்ருன். அவர்களும் அப்படியே அவன் திருவாக்கைப் பெருவாக்காகக் கடைபிடித்துத் தவஞ் செய்யச் சென்ருர்கள். அவர்கள் தவம் அகோரதவமா யிருந்ததனல், தேவரும் மூவரும் யாவரும் என் செய்வோம் என்று அஞ்சி நடுங்கினர்கள். திருமால் முதலியோர், தாரகனுக்குத் தாம்செய்ய வேண்டிய ஏவலையும் மறந்து, வைகுந்தத்தில் ஒரு பெருங்கூட்டங்கூடி ஆலோசித்தார்கள்.

அக்கூட்டத்திற் பலரும் பலபடி பேசினர்கள். கடைசியாகத் திருமாலாகிய அக்கிராசனதிபதி எழுந்து பின்வருகிறபடி பேசினர்.

"ஏ பிரம உருத்திரர்காள், தேவர்காள், முனிவர்கள்! நீவிர் சொன்ன யாவும் உண்மையேயாகும். தாரகன் தன்னைப்பார் ஒருவரின்றி, நம்மை அடிமைகளாக்கி அரசு புரிகின்ருன். அவனல் நாம் படும்பாடு பெரும்பாடாய்த் தவிக்கிரும். 'முன்னே முளைத்த காதைப்பார்க்கிலும், பின்னே முளைத்த கொம்பு உறுதி' என்றபடி அவனுடைய மைந்தரும் தந்தவமுடித்து அழியாவரம் பெற்று வருவரேல் நங்கதி அதோகதிதான், ஒருவருக்கு ஊழியம் செய்வதற்கே நாம் வருந்துகிரேமென்ருல், பிறகு, நால்வர்க்கு ஊழியஞ் செய்வது எப்படி? இப்படியும் நமது விதியிருக்குமா! 'உள்ளியர் தெள்ளியராயினும் ஊழ்வினை பையவுழையும்,' என்றபடி, ஊழ் யாரைவிட்டது? ஆயினும், 'ஊழையும் உப்பக்கங் காண்பர் உலைவின்றித், தாழா துஞற்றுபவர்' என்றபடி நாம் ஒரு மனதாய் ஒற்றுமையோடு முயல்வோமானல்; நமது துன்பத்தைத் துடைக்கலாம். இந்தத்துயரம் பெயர, இப்போதே நாம் அனைவரும் ஒன்றுசேர்ந்து அபிசார வேள்விசெய்வோம். அது முடிந்தால் நம்பகைவன் பலமும் முடியும்" என்று முடித்தார். எல்லாரும் ஓம் என்றுடன் பட்டார்கள்.

அப்படியே அவர்கள் அங்கோர் இடத்தில் அபிசாரவேள்வி செய்யத் தொடங்கினர்கள். வேவுகாரர்கள் மூலமாய் அது தெரிந்த

தாரகன் விரைந்தோடிவந்து அந்த யாகத்தை அழித்தான். அவனைக் கண்டு அஞ்சி ஓடின திருமால் முதலிய தேவர்கள் யாவரும் மேரு மலையைத் தேடிச்சென்று ஒளித்துக்கொண்டார்கள், அங்கும் அவர்களைத் துரத்திச்சென்ற தாரகன் கடுங்கோபங்கொண்டு, "ஏ, முனிவர்களே, தேவர்களே, மூவர்களே நீவிர் பேடிகள் என்பதற்குத் தடையில்லை, என்னை யறியாமல் என்னென்னவோ செய்யவேண்டுமென்று எண்ணுகிறீர்கள். பண்ணாத யோசனைகள் பண்ணுகிறீர்கள். ஆண் பிள்ளைகளானால் இப்போது என்னெதிரில் வந்து சண்டைசெய்யுங்கள். வீண்பிள்ளைகளாகிய பேடியர்களானால் ஒதுங்கிப் பதுங்கி யிருங்கள். நீங்கள் பதுங்கியிருந்தாலும் உங்களை நான் விடப்போகிறதில்லை. இதோ, பாருங்கள் என் வல்லமையை! உங்களுக்கு இடங் கொடுத்துள்ள இந்த மேருமலையை இப்படியே அடியோடு பேர்த்தெடுத்துக் குலுக்கி உங்களை உதறிப்போடுகிறேன். அப்பால் எங்கே போவீர்கள்? ஏ, கொசுக்கூட்டங்களே! என்று சொல்லிக்கொண்டே, கயிலையை அள்ளின இராவணனும் தனக்கிணை அல்ல என்று சொல்லும்படி, அம்மலையைக் குடைந்தெடுத்துத் தூக்கிக் குடைபோலப் பிடித்துக் கிருகிருவென்று சுழற்றி உதறினன். மரத்திற்கனிந்திருந்த பழங்கள் சூறைக்காற்றில் தொப் தொப்பென்று உதிர்வது போலத் தேவரும் மூவரும் யாவரும் கீழே வீழ்ந்து கயிலையை நோக்கி ஓடினார்கள். அவர்கள் ஓடியதைக்கண்ட தாரகன் மேருமலையைக் கீழே எறிந்துவிட்டுத் தன் ஊர் போய்ச்சேர்ந்தான.

பிரமதேவனிடத்தும் வரம்பெற்ற தாரகன் மூவுலகையும் அடக்கி ஆள்கையில், இந்திரன் முதலிய தேவர்களும் பிறரும் பயந்து, காடு, மலை, வனம், கடல், அண்டப்புறம் என்னும் இடங்களில் உருமாறி ஒளித்து வசித்தார்கள். அப்போது இந்திரன் தாரகனை எதிர்த்துத் தன்வச்சிராயுதத்தை அவன்மேல் எறிந்தான். அது துரும்புபோல் மடங்கிக் கீழே விழுந்தது. அதைக்கண்ட இந்திரன் பயந்து முனிவன்போல உருமாறித் தன்மனைவி இந்திராணியையும் மைந்தன் சயந்தனையும் உடன் அழைத்துக்கொண்டு வனத்துக்குச் சென்று பன்னசாலையில் வசித்தான். அக்கினி, தாரகனுக்கு மடைத்தொழில் செய்தான். வாயுபகவான், தாரகன் அரண்மனையில் குப்பை வாரும் வேலையில் அமர்ந்திருந்தான். குபேரன் அவனுக்குப் பொக்கிஷாதிகாரியாயிருந்தான். (தொடரும்)

திவான் பகதூர் S. பவானந்தம் பிள்ளை, எம். ஆர். ஏ. எஸ்., ஐ. எஸ். ஓ.

சமயம்.

(480-ஆம் பக்கத்தொடர்ச்சி)

குறிப்பு கந்தம் ஆறாவன:—சோத்திரம், துவக்கு, சட்சு, சிங்ஙுவை, ஆக்கிராணம், மணம் என ஆறு.

பாவனைகந்தம் இருபதாவன:—தீக்குணம் பத்தும், நற்குணம் பத்தும் என இருபது.

தீக்குணம் பத்தாவன:—பொய் சொல்லல், கோட் சொல்லல், கோபித்துச்சொல்லல், பயனில் சொல்லல் என்கிற வாக்கின் குணம் நாலும், களவுக்குப்போதல், வறிதே தொழில்செய்தல், கொலை செய்தல், என்கிற காயத்தின் குணம் மூன்றும், கொலை நினைக்கை, காமப்பற்று, ஆசைஎன்கிற மனத்தின் குணம் மூன்றும் ஆக தீக்குணம் பத்து

நற்குணம் பத்தாவன:—மெய்யுரை, நல்வார்த்தை, இனியன கூறல், பயன்படுவன சொல்லல் என்கிற வாக்கின் குணம் நாலும், பள்ளி வலம் வருதல், தவம்புரிதல், தானஞ்செய்கை என்கிற காயத்தின் குணம் மூன்றும், அருணினைவு, ஆசையறுத்தல், தவப்பற்று என்கிற மனத்தின் குணம் மூன்றும் ஆக நற்குணம் பத்து.

விஞ்ஞான கந்தம் ஆறாவன:—சத்தம், பரிசம், உருவம், இரதம் கந்தம், சித்தம், என்கிற ஆறுமாம்,

இனி சௌத்திராந்திக மென்பது, புறப்பொருள்கள் சூனியமென ஆசிரியன் உணர்த்தியவழி, யான் இது கண்டேனென்று உணர்வுழி யான் என்னும் ஞானம் அகத்துப்பொருளும் இது என்று சுட்டியறியப்படுவது புறத்துப் பொருளுமாகலின் அவற்றிற்கு வேறுபாடு விளங்குகின்றமையின், புறப் பொருள்களெல்லாம் சூனியமென்பதென்னை? என வினவினர்க்கு, நன்றே வினவினீர்! புறத்துத் தோன்றுவனவும் உள்பொருள்களேயாம், ஆனல் அவை காட்சி பொருள்களென்று, ஞானத்துட் பற்றிய வடிவானே வழியளவையின் வைத்து உணரப்படும் என ஆசிரியன் உணர்த்தினன், அது கேட்ட மாணுக்கர், இங்ஙனம் மாணுக்கர் வினவிய வினவிற்கேற்ப அறிவுறுக்குஞ் சூத்திரங்கள் எவ்வளவின் முடிவுபெறும் எனக் கடாயினர். அவ்வழி ஆசிரியன் சூத்திராந்தம் கடாவிய நீர் சௌத்திராந்திகர் எனப்பெயர் பெறுக என்றமையின் வந்த பெயர்.

சௌத்திராந்திகத்துக்கு சமுதாய வாதம் எனவும், பரமாணு காரண வாதம் எனவும் பெயர்கள் உண்டு.

வைபாடிகம்

வைபாடிகமாவது.—சௌத்திராந்திகத்திற் கூறியவாறு கொண்டு, புறப்பொருள் ஞானத்தால் அநுமித்தறியப்பாற்றன்று. புறப்பொருள் காட்சிப் பொருளே என்பதாம்.

வைபாடிகமென்பது. புறப்பொருள் வழியளவையான் உணரப்படும் என ஆசிரியன் உணர்த்திய வழி, அதனை உடம்படாது, ஞானம் தனக்குக் காட்சிப்பொருளாகலானும், காட்சிப்பொருள் ஒன்றுமின்றாயின் நியதமான உடனிகழ்ச்சி உணர்ச்சிக்கு இடமின்மையான் வழியளவை நிகழாதாகலானும் இது மாறுகோளுரைபோலும் என வினவியதால் வந்தபெயர். மாறுகோளுரை எனினும் விபாடை எனினும் பொருந்தும்.

வைபாடிகத்துக்கும் சமுதாயவாதம் பரமாணுகாரணவாதமெனும் பெயர்களுண்டு.

ஆருகதம்

ஆருகதமாவது:—சீவன், அசீவன், ஆச்சிரவம், சமுவரம், நிர்ச்சரம், பந்தம், வீடு எனப் பதார்த்தங்கள் ஏழுள. சீவன் அநாதி சித்தன், முத்தன், பெத்தன் என மூவகைப்படும், அநாதி சித்தன் அருகக்கடவுள். முத்தன், மோகம் முதலிய பந்தத்தின் நீங்கினவன், பெத்தன் அவற்றுட் கட்டுண்டவன். இச்சீவன் எடுத்த உடம்பளவின் வியாபகமாய் உடம்புதோறும் வெவ்வேறாம் சீவன் மோகம் முதலியவற்றின் நீங்கிச் சுதந்தரம் பெற்று உலகங்கடந்து எல்லையின்றி உளதாகிய ஆகாயத்தில் மேனோக்கிச்சேர்ந்து மேலெல்லைக்கண் இருப்பது முத்தி என்பதாம்.

ஆருகதத்துக்குச் சைனம், சமணம், பரமாணுகாரணவாதம், அநேகாந்த வாதம் எனும் பெயர்களுண்டு.

அநேகாந்தமாவது வினவிற்கெல்லாம் விடையிறுப் புழி, உண்டாம், இல்லையாம், உண்டுமில்லையுமாம், சொல்லொணாததாம், உண்டுமாஞ் சொல்லொணாததுமாம், இல்லையுமாஞ் சொல்லொணாததுமாம் உண்டுமில்லையுமாஞ் சொல்லொணாததுமாம் என ஏழு வகையான் இறுத்தல்.

நிகண்டாவாதம்

நிகண்டாவாதமாவது:—ஞானவாணியம், தரிசன வாணியம்,வேதினீயம், மோகனீயம், ஆயுசு, நாமம், கோத்திரம், அந்தராயம் என்கிற குணங்கள் எட்டும், பசித்தல், தாகம், பயம், செற்றல், உவகை

மோகம், சிந்தனை, பழித்தல், நோய், நசித்தல், வேர்வை, கேதம், மதம், வேண்டல், அதிசயித்தல், உருசிப்பு, பிறப்பு, உறக்கம் என்கிற குணங்கள் பதினெட்டும், அரசிகம், இரதி, அரதி, சோகம், சுகுச்சை, பயம் என்கிற குணங்களாறும், ஆக விங்ஙனஞ் சொல்லப்பட்டு வருகிற மூவகைக் குணங்களையும் விட்டுப்பூர்வ கன்மத்திலுண்டாகிய கன்மங்களையும் புசித்தொழிந்த அவதாரந்தானே வீட்டின்பமென்பதாம். ஆகையால் முக்குணங்கள் கெடுவதே முத்தியெனப்படும்.

புறச்சமயங்கள்,

தருக்கம்.

தருக்கமானது வைசேடிகம், நையாயிகம் என இரு வகைப்படும்.

வைசேடிகம்.

வைசேடிகமாவது:—திரவியம், குணம், தொழில், சாதி, விசேடம். சமவாயம், இன்மையெனப் பதார்த்தங்கள் ஏழு வகைப்படும். அவைகளின் சிறப்பியல்பு, பொதுவியல்பு வேற்றியல்புகளை உணரவே உடம்பு முதலியவற்றின வேறாகிய ஆன்மாவின் இயல்பு விளங்கும். விளங்கவே, உடம்பு முதலியவற்றை நானென்று எண்ணிய மித்தையுணர்வு கழியும். அதனால் முயற்சியின்மையின் அறம்பாவங்களில்லையாய்ப் பிறவி ஒழியும்: ஒழியவே வரக்கடவனவாகிய துன்பங்களின்மையின், உடம்பு முகந்துகொண்ட வினைப்பயன் நுகர்ச்சியாற் கழிவுழி இறுதித் துன்பங்கெட்டு மனத்தோடு கூடுதற் கேதுவின்மையின் அறிவின்றிப் பாடாணம்போற் கிடப்பதே முத்தி என்பதாம்.

நையாயிகம்.

நையாயாயிகமாவது:— வைசேடிகநூலிற் கூறியவற்றைச் சிறுபான்மை வேறுபடுத்திப் பிரமாணம் பிரமேயம் முதலாகப் பதினறு வகையான் விரித்துக் கூறி முத்தியில் ஆனந்தம் உண்டு என்பதாம்.

இவ்விருவரும் கணபங்கங் கூறுவர். இவர்கள் பரமாணு காரணவாதிகளாவர்.

தார்க்கிகர் வேதத்தைப் பரதப்பிரமாண மாகவும், பரமான்மாவைச் சகுணப் பொருளாகவும் கொள்வர்.

மீமாஞ்சை,

மீமாஞ்சையாவது:—வேதம் ஒருவராற் செய்யப்பட்டதன்று; அனாதியே சுயம்புவா யுள்ளது. ஆகலின் வேதம் பிரமாணமாகும்.

அது விதியும், புனைந்துரையும், மந்திரமும், குறியீடும் என நான்கு வகைப்படும். அவற்றுள் விதி அங்கியும் ஏனை மூன்றும் விதிக்கு அங்கமுமாம். விதி வாக்கியம் விதித்தலும் விலக்குதலும் என இரு வகைப்படும். அவைபற்றிச் செய்யும் வினையும், அறமும் பாவமும் என இருதிறப்படும். வினை செய்தவர்க்கு வினையே துறக்கம் முதலிய பயன்களை உதவும். காமியவினை காமியப் பயனைக் கொடுக்கும். நிஷ்காமியவினை முத்தியைக்கொடுக்கும். ஆன்மாக்களுக்கு வேறாய்ப் பரமான்மா ஒருவன் உண்டென்பதும், உலகந் தோன்றி யழியும் என்பதும் பொய், உலகம் என்றும் இவ்வாறே நிலைபெறும் என்பதாம்.

இது மீமாஞ்சை நூலிற் கூறப்பட்ட கொள்கை யாதலால் மீமாஞ்சை யெனப் பெற்றது.

மீமாஞ்சை நூலென்பது வேதத்தில் ஞானகாண்டத்தை இகழ்ந்து கருமகாண்ட வாராய்ச்சி செய்வதற் கெழுந்த நூல். இதுவும் வேத மெனப்படும். மீமாஞ்சைநூல் பூர்வ மீமாஞ்சை உத்தர மீமாஞ்சை என இருதிறப்படும்.

மீமாஞ்சை மதத்தில் பட்டாசாரியன் மதம், பிரபாகர மதம் எனும் இரண்டு உட்பிரிவுகளுண்டு.

பட்டாசாரியன் மதம்.

பட்டன் மதமாவது:—கன்மமே பயன் கொடுக்கும். நையாயிகம் கூறுவதுபோல முத்தியில் ஆனந்தம் உண்டு என்பதாம்,

பிரபாகர மதம்.

பிரபாகர மதமாவது:—கன்ம நாசத்தில் அபூருவம் என ஒன்று தோன்றி நின்று பயன் கொடுக்கும். அபூருவமாகிய ஞானமுங் கெட்டபோது, வைசேடிகர் கூறுவதுபோல, பாடாணம்போற் கிடப்பதே முத்தி என்பதாம்.

பிரபாகரமதத்துக்குக் குருமதமெனவும் பெயருண்டு.

ஏகான்மவாதம்.

ஏகான்மவாதமாவது வேதத்தின் கன்ம காண்டத்தையிகழ்ந்து ஞானகாண்டத்தைப் பிரமாணமாகக் கொண்டது.

ஏகான்மவாதமானது மாயாவாதம், பாற்கரியவாதம், கிரீடாப் பிரமவாதம், சத்தப்பிரமவாதம் என நான்கு வகைப்படும்.

(தொடரும்)

பஞ்சாட்சரபுரம் வாலையானந்தம்.

செய்திக்கொத்து.

உலகத்திலுள்ள நூல்களெல்லாம் தீக்கிரை யாயினும், திருக்குறள் திருவாசகம், பைபிள், ஆகிய மூன்று நூல்களும் இருக்கு மட்டும் அச்சமில்லை என்று ஓர் ஆங்கிலேயர் கூறியிருக்கிறார்.

செவ்வாயில் மனிதர்கள் வாழ்கிறார்களாம். ஆனால் நம்மைவிட நாகரிகத்திலும் ஞானத்திலும் சிறந்தவர்களாம். அவர்கள் நம்மைப்போல அந்நியர்களுக்கு அடிமைகளாகவும் இல்லையாம்.

டில்லியிலுள்ள குட்புமினர் என்ற பெரிய இரும்புத் தூணைது பூலோகத்திலுள்ள அதிசயங்களில் ஒன்றும். ஆறுடன் பாரமும் இருபத்து மூன்றடி உயரமுமுள்ள அந்தத்தூண் கி. பி. 800-ம் ஆண்டில் சுமார் 1625 வருஷங்களுக்கு முன் நிறுவப்பட்டது. இயந்திர உதவி யில்லாத அந்தக் காலத்தில் இந்த விந்தையான தூணை எவ்வாறு செய்தார்களென்று வெள்ளைக்காரர்கள் வியப்படைகிறார்கள்.

ரிக்ஷா ஏறக் கூடாது.

சீன தேசத்தில் கிறிஸ்தவ தளகர்த்தரெனப் புகழ்பெற்று விளங்கும் ஜெனரல் பெங் என்பவர், தம் உத்தியோகஸ்தர்கள் மனிதனால் இழுக்கப்படும் ரிக்ஷா வண்டிகளில் செல்லக்கூடாது என்று உத்திரவு செய்திருக்கிறார். ஒரு தடவை இவர் நேரில் ஒரு உத்தியோகஸ்தர் அவ்வாறு ரிக்ஷாவில் சவாரி செய்வதைக் கண்டபோது, அந்த உத்தியோகஸ்தரை வண்டியினின்றும் இறங்குமாறு செய்து, ரிக்ஷா இழுப்பவனுக்கு முழுக் கூலியும் வாங்கிக் கொடுத்து, அந்த ரிக்ஷாக்காரனை வண்டியில் அமருமாறு செய்து இந்த உத்தியோகஸ்தரை ரிக்ஷா இழுக்கச் செய்தாராம்.

கண்ணாடித் தொழிற்சாலை.

சென்னையை அடுத்த கத்தியவாக்கத்தில் ஐம்பதினாயிரம் ரூபாய் முதல் வைத்து ஒரு கண்ணாடித் தொழிற்சாலை ஏற்படுத்தப் போகிறார்களாம். இதனால் ஏழைமக்களில் ஒருபகுதியார் பசியார சாப்பாட்டிற்கு சம்பாதிக்க ஏது ஏற்பட்டிருக்கிறது.

தண்ணீர்ப்பஞ்சம்.

சேலத்தில் தண்ணீர் பஞ்சம். சந்தைகளில் படி தண்ணீர் காலணாவாக விற்கிறதாம். இந்நிலைமையை அனுசரித்து அவ்வூர் நகர பரிபாலன சபையார் விடா முயற்சியுடன் பணச்செலவை கவனியாது வேண்டிய வசதிகளை உடனே எடுத்துக்கொள்ளுவார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது. கடவுள் கூடியசீக்கிரம் நல்ல மழை யுண்டுபண்ணி கஷ்டத்தை ஒருவாறு போக்க, எல்லோரும் வழிபடல் வேண்டும்.

கிராமம் தீக்கிரையாயிற்று.

பர்மாவில் ப்ரோமிலிருந்து 17-மைல் தூரத்திலுள்ள சின்னியோ என்னும் கிராமத்தில் ஒரு சிறுவன் ஒரு மரத்தின் மீதுள்ள தேன்கூட்டை

கலக்குமாறு ஒரு தீவட்டியை எடுத்துக்கொண்டு ஏறினான். தேனீக்கள் கொடுமையாகக் கொட்டத்தொடங்கியதால் சிறுவன் கலங்கித் தீவட்டியைக் கீழே போட்டுவிட்டான். தீ ஒரு குடிசையில்பற்றி ஊர்முழுவதும் பரவி அங்குள்ள 56-வீடுகளையும் எரித்து அழித்துவிட்டது. சிறுவனும் உயிரிழந்தான்.

காந்தியடிகளின் புத்திமதி.

மனத்துக்கண் மாசில்லாமல் எவன் ஒருவன் உண்மையாக உள்ளத்தில் இறைவனை எண்ணுவானோ, பணிவாக எவன் தெய்வத்தைத் தேடுகின்றானோ, அவனுக்கு தெய்வசகாயம் கட்டாயம் கிடைக்குமென்று மகாத்மா காந்தி சொல்லுகிறார்.

இங்கிலாந்திலுள்ள பெரிய பாங்கியில் ஒரு இயந்திரம் மணிக்கு 50,000 நாணயங்கள் வீதம் இனுசு வாரியாக பொருக்கிப் பைகளில் போட்டுக் கட்டிவிடுகிறதாம்.

திருப்பைஞ்ஞீலி அப்ப மூர்த்திகளுக்கு அமுதளித்த வைபவம்.

திருப்பைஞ்ஞீலி என்பது காவிரிக்கு வடகரையிலுள்ள சிவ க்ஷேத்திரங்களுள் ஒன்று. ஞீலி என்பது வாழையென்று பொருள்படும். பசிய வாழையை என்றும் உடையது, இந்த க்ஷேத்திரமாதலால் இதற்குத்திருப்பைஞ்ஞீலி என்ற பெயருண்டாயிற்று. இத்தலத்தில் அப்பமூர்த்திகளுக்கு அமுதளித்த வைபவம் 6—5—26 புதன்கிழமையன்று மிகச்சிறப்பாக நடந்தேறியது அடியார் கூட்டத்திற்கு அளவின்று. பக்திவயப்பட்டவர் பரவையெனக்கூடியிருந்தனர். பகல் 12 மணிக்கு பைஞ்ஞீலிக்குப் பக்கத்திலுள்ள திடலில் அமைக்கப்பெற்ற பந்தரில் அமுது அளிக்கப்பெற்றது. பல ஊர்களில் இருந்து வந்திருந்தவர்களுக்கெல்லாம் இன்னமுது உவப்புடன் அளிக்கப்பெற்றது பிற்பகலில் ஆலயத்தின் முகப்பில் ஒரு பெருங்கூட்டங் கூடிற்று. அவ்வமயம் திரிசிரிபுரம் சைவசித்தாந்த சபை, திருக்கற்குடி சிவனடியார் திருக் கூட்டம், திருநெறிக்கழகம், தமிழ்ச்சங்கம் என்ற சங்கங்களின் ஆதரவில் அப்பர் பெருமையைப்பற்றி உபந்நியாசங்கள் நடந்தேறின. தொடக்கத்தில் திரு. பஞ்சரத்தினம்பிள்ளை "அப்பர் பெருமை" க்கு அடிப்படையாக உள்ளவைகள் இவைகளென்று விரித்துக்கூறினார், திரிசிரபுரம் தமிழ்ப்பண்டிதர் மு. நடேசமுதலியார் "அப்பர் வரலாற்றைப்" பற்றி விரிவாய்ப்பேசினார்கள். பின்னர் திரு. பஞ்சரத்தினம்பிள்ளை முடிவுரையாகச் சில பேசியபின்னர் சபை நிறைவேறிற்று. இடையிடையே திருக்கற்குடிச் சிவனடியார் கூட்டத்துத் தேவார கூட்டம் தேவாரப்பாசுரங்களை ஓதிற்று. பிற ஊர்களிலிருந்தும் தேவாரத்திருக்கூட்டத்தினர் வந்து பாசுரங்களை ஓதிச்சிறப்பித்தனர் என நமது நிருபர் எழுதுகிறார்.

சக்கரை ஆலை.

திருவாங்கூர் சமஸ்தானத்தில் பெரிய சர்க்கரை யாலை ஒன்றை ஏற்படுத்துவதற்குப் புதிதாக அடிப்படைக்கல் நாட்டப்பட்டது. அந்த ஆலையின் மூலப்பொருளில் கால்பங்கு திருவாங்கூர் அரசாங்கம் எடுத்துக்கொண்

ழிருக்கிறது. முற் காலத்தில் அதாவது இதுவரையில் சமஸ்தானத்தில் விளையும் கரும்பினின்று வெல்லம் எடுத்து மற்ற நாடுகளுக்கு அனுப்பி அவ்விடம் உயர்ந்த சர்க்கரையாகவும், கற்கண்டாகவும், மாற்றப்பட்டும், திரும்பவும் அவைகளை தங்கள் நாட்டில் உபயோகப்படுத்திக் கொண்டிருந்தார்களாம். ஆண்டு தோறும் பத்து நூறு ஆயிரம் ரூபாய் பெறுமானமுள்ள சரக்குகள் இம்மாதிரி வெளியேறுமாம். இவ்வித ஆலையில் எல்லாவிதங்களையும் தயாரித்துக்கொள்ள ஏது இருக்கிறதாம். யாவற்றையும் செய்த பிறகு தங்கும் பதார்த்தங்களிலிருந்து சர்க்காரால் வடிக்கும் சாலையில் சாராயம் முதலானது செய்வதற்கு உபயோகப்படுத்துவார்களாம்.

அமெரிக்காவிலுள்ள எண்ணெய்க் கிணறுகளெல்லாம் வற்றினும், மோட்டார் ஒரு சாதகமுமுண்டாம்.

பிரான்சு தேசத்து நிபுணர் ஒருவர் ஒருவித செடியிலிருந்து (Petrol) எண்ணெய் எடுக்கலாமென்று கண்டு பிடித்திருக்கிறார். ஆப்பிரிக்காதேசத்தின் தென்பாகத்திலுள்ள இலட்சக் கணக்கான ஏக்கர் பரப்புள்ள காலியிடத்தில் அச்செடியை உற்பத்தி செய்து பத்து இலட்சம் காலன் எண்ணெய் உற்பத்தி செய்யக்கூடுமென்று கூறுகிறார். தற்காலம் கிணற்றிலிருந்து எடுக்கப்படும் எண்ணெய்க்குச் சமானமானதென்றும் உறுதியாகவும் கூறுகிறார்.

அச்சு இயந்திரங்களுக்கு உபயோகப்படும் மை.

ஒரு பவுன் எடையுள்ள குங்குலிய எண்ணெயுடன் மூன்று அவுன்சு எடையுள்ள குங்குலியமும், மூன்று அவுன்சு நிறையுள்ள மிருதுவான மஞ்சல் சோப்பையும் சேர்த்து விடாது கிளறிக்கொண்டே காய்ச்சினால் ஏகப்பிரமானமாக கலப்பாய்க்கொண்டுவரும். சரியானபடி கட்டியாகப் போகாமல் வருவதற்கு போதிய குங்குலிய எண்ணெய்விட்டு காய்ச்சுவது மேலானது. பின்பு இறக்கிவைத்து குளிர்ந்தவுடன் எந்த நிறம் வேண்டுமோ அந்த வஸ்துவைக் கலக்க நல்ல உபயோகமுள்ள அச்சு மை செய்யலாம்.

அழுகிப்போன உருளைக்கிழங்கும் உபயோகப்படுமோம்:-

உணவு பொருளாக உபயோகப்படுவதற் கில்லாத உருளைக்கிழங்கிலிருந்து மிகவும் உபயோகமான ஒருவித நிறமில்லாததும், வாசனையில்லாததுமான எண்ணெய் இரக்கலாமென்று ஆஸ்டிரேலியாவில் கண்டு பிடித்திருக்கிறார்கள். அந்த எண்ணெயானது மிகவும் நுட்பமான இயந்திரங்களைச் சுத்தி செய்வதில் நிகரற்றதாயிருக்கிறதாம். அதிக குளிர்ந்த காலங்களில் உரைகிறதில்லையாம். ஆகையால் ஆகாய விமானங்களிலுள்ள பொறிகளையும் சுத்தி செய்வதற்கு உபயோகப்படுமாம். எண்ணெ பிழியும் விதம் அதிக இலகுவாயும், சொற்ப செலவிலும் முடியக்கூடியதாம். அதிகமாக உருளைக்கிழங்கு விளையும் நாட்டில் அழுகி கெட்டுப்போகும் நஷ்டத்தை ஈடு செய்ய இது ஒரு சிறந்தவழி, இவ்விதம் செய்வதினால் உருளைக்கிழங்கு அழுகி, அதனால் உண்டாகும் ஒருவிதப்பிணியிலிருந்து தப்புவதற்கும் ஏதுவாகும்.

எம்.எஸ். பூரணலிங்கம்பிள்ளை அவர்கள் இயற்றிய நூல்கள்

எந்த நூலையும் மொத்தமாக வாங்குபவர்களுக்குத் தக்க கமிஷன் கொடுக்கப்படும்.

ஐரோப்பிய யுத்தம்—படங்களுடன். மு. சி. பூர்ணலிங்கம் பிள்ளை பி.ஏ.எல்.டி. யால் இயற்றப்பெற்றது. விலை அணா 8. அட்டை சேர்த்தது அணா 10. இதனை ஆக்கியோனை தமிழ் நாட்டில் அறியாதார் எவருமிலரென்றே கூறுவம், திங்கள்தோறும் சென்னையினின்று ஏழு ஆண்டுகளாக வெளிவந்த ஞானபோதினி என்னும் அருமையான நன்கு மதிக்கப்பெற்ற தூயதமிழ்த் தொகுதியை நடாத்தியவர் இவரேயாம். அன்றியும் இவர்பல கல்லூரிகளில் பல வாண்டுகளாக ஆங்கிலமொழியைப் புகட்டி வந்தனர். இந்நூலின் பொருளடக்கத்தால் நூல் பெருமை விளங்கும். ஆங்கிலமே கற்காத தமிழ்மக்களும் உலகப்பகுதியையும், உலகில் சிறந்து விளங்கும் மக்கட்டொகுதிகளின் செய்கைகளையும் எளிதில் படித்தறியலாம். பகுதிகள் 1, கண்டங்கள் 2, ஐரோப்பா கண்டம் 3 பிரிட்டிஷ் தீவுகள் 4, ஷை பேரரசு 5. ஜெர்மனி 6, ஷை குடியேறிய நாடுகள் 7, ஷை நாட்டின் வரலாறு 8, பெரிய யுத்தத்தின் காரணங்கள், யுத்த நிகழ்ச்சிகள் முதலியன 9, யுத்த முடிவு 10, ஆறு அரசுகள் 11, ஐரோப்பாவில் பெரிய ஆட்சியாளர்கள் 12 அரும்பதவிளக்கம். பத்துப்புத்தகம் வாங்குபவர்களுக்கு ஒரு புத்தகம் இனாம். இப்புத்தககத்தைப் பெருமைப்படுத்திப் பேசாத தமிழ், ஆங்கில நாள் தாள்கள் கிடையா.

2. காமாட்சி-ஷையாரியற்றியது விலை அணா 4. இது மோலியர் பிரஞ்சு நகை நாடகக்கதையை அடிப்படையாக உடையது, இன்பமளிக்கத்தக்கது. ஒருமணி நேரத்தில் நடித்துக் காட்டக்கூடியது. மனமயக்கங்கொண்ட மகளுக்கு மருந்து மணமென்பதே இதனுட் பொருளாம். காமாட்சிக்குற்றநோய் காமமென்று அறியாமல் பலஆயுள்வேதியர்கள் கூடி அவள்நோய்க்கு மருந்து இன்னதென்று காணமுடியாமல் தமக்குத் தோன்றியவாறு பேசி பணம் பறித்தலும் இயற்கை யறிவுமிகுந்த ஒருவன் உண்மையைக் கண்டுபிடித்து நோயை எளிதில் அகற்றலும் இவற்றைப் பற்றிய காட்சிகள் படிக்கப்படிக்க இன்பம் விளைக்கும். பள்ளிமாணவர்கள் இதனைப்படித்து ஆண்டுவிழாக்களில் நடித்து பலரும் மகிழுமாறு செய்யலாம்.

3. கதையும் கற்பனையும் ஷை விலை அணா 2. இதில் முப்பது கதைகளுள. இவை சிறுவர் சிறுமிகளுக்காக எழுதப்பட்டன. பள்ளிக்கூடங்களில் உரை நடை எழுத முயலும் மாணவர்களுக்கு இக்கதை மிகப் பயன்படும்.

4. பன்னிரு பெண்மணிகள் ஷை விலை அணா 6. ஜெகப்பிரியர் நாடகங்களில் திகழும் பன்னிருபெண்மணிகளைப்பற்றிய உரை நூலாம். பெண்கள் படிக்கத்தக்கது. ஒவிலியா, டெஸ்டிமோனா, கார்டெலியா, லீயர், மெக்பெத் பிராட்டி, காதரீனா, இமோஜன், ஹெர்மியோன், ரோஸலிண்டு, இஸபெல்லா, வயோலா, போர்ஷியா இவர்களே உரையிலுள்ள பெண்மணிகளாம். நூல்கள் பின்வரும் விலாசத்திற்கு எழுதினால் கிடைக்கும்.

கணபதி பண்டசாலை,

25, காரோனேஷன் தோட்டக்கடை வரிசை,

தெப்பக்குளம் (போஸ்டு), திருச்சிகோட்டை.

பஞ்சாட்சரபுரம்

பெருந்திரு வாலையானந்த சுவாமிகள் பொது நலத்திற்காகவே பல அன்பர்களின் வேண்டுகோளுக்கிணங்க விலை உயர்ந்த சரக்குகளாலும் கிடைத்தற்கரிய அருமையான மூலிகைகளாலும் தமிழ் சித்த வைத்திய முறையிற் கூறியபடி ஒரு சிறிதும் பிசகாமல் செய்து பல ஆண்டுகள் உபயோகித்து, அநுபவத்தில் மிகச்சிறந்த அருமையான மருந்துகள். இம் மருந்துகள் இலாபத்தை ஒரு சிறிதும் கவனிக்காது பரோபகாரத்தை முன்னிட்டே செய்யப்பட்டவை என்று நாம் அநுபவித் தறிந்ததனால் துணிந்து மிகவும் உறுதியாகக் கூறுகிறோம். சுவாமிகள் மருந்தின் அபார சக்தியை எம்மால் இவ்வளவென்று அளவிட்டுச் சொல்லமுடியாது. குழந்தைகள், பெண்மக்கள், ஆண்மக்கள், வயோதிகர் ஆகிய எல்லோருக்கும் ஏற்ற எல்லா மருந்துகளும் எம்மிடம் குறைந்த விலைக்குக் கிடைக்கும்.

2. **தமரித்தைலம்:**-(விலை உயர்ந்த சரக்குகளால் செய்யப்பெற்றது. மூளைவேலை யுள்ளவர்களுக்கெல்லாம் மிகச்சிறந்தது. இதற்கு நிகரான தைலம் வேறு கிடையாது) பெரிய புட்டி, 2—8—0; சின்னது 1—4—0,

3. **நேத்திர ரஞ்சனி அரக்:**—கண்ணில் உண்டாகும் எவ்விதமான நோயையும் பஞ்சாகப் பறக்கடிக்கும் தன்மையுள்ளது. இதை உபயோகப்படுத்தினவர்கள் இழந்த கண்ணை மீண்டும் பெறுவார்களென்பதில் யாதும் ஐயமே யில்லை. பெரியபுட்டி, 1—0—0; சின்னது 0—12—0

4. **பற்பொடி:**—(தந்தரோக நிவாரணி) பற்பொடிகளெல்லாவற்றிலும் மிகச்சிறந்தது. இதை உபயோகப் படுத்தினவர்கள் பற்கள் முத்துப்போல் வயோதிகம் வரையில் உறுதியாயிருக்கும் என்பதை அநுபவத்தில் தெரிந்துகொள்வார்கள். ஒன்று 0—3—0; 1 டஜன் 2—0—0.

5. குழந்தைகளுக்கு முக்கியமாகவும் ஆவசியமாகவும் வேண்டிய மருந்துகள்:—**கோரோஜனை மாத்திரை, காக்காட்டான் மாத்திரை, இராசசுகபேதி மாத்திரை, சுரமாத்திரை, பாலரக்ஷாமணி,** ஆகியவும் பிறவும் எம்மிடம் கிடைக்கும்.

6. **வீரியவிர்த்தி மாத்திரை:**—இரத்தத்தைச் சுத்தி செய்துகொள்ள வேண்டுமா? நித்திரையில் உண்டாகும் இந்திரிய நஷ்டம் நிற்கவேண்டுமா? அஜீரணம், பித்த எப்பம் நீங்கவேண்டுமா? வீரியவிர்த்தி மாத்திரையை உபயோகிக்க அவைகளெல்லாம் நீங்கித் திடமுண்டாகி ஆண்புலிபோல் உலாவலாம். ஒரு புட்டி 1—8—0

7, **சர்வ ரணசஞ்சீவி:**—மேகரணங்கள், வெட்டுக்காயங்கள், புரைப்புண்கள் முதலியவைகளுக்கு வைரி. மிதுவே. குதிரை, மாடு, ஆடு; முதலிய மிருகங்களுக்குண்டான இரணங்களை மாற்றுவதில் பிரசித்திபெற்றது.

8, **தேள்கடிமருந்து:**—அழுதவர்கள் அரை நிமிஷத்தில் சிரிப்பார்கள். தேனீக்கடி, பூரான் கடி, குளவிக்கடி. சிலந்திக்கடி முதலிய கடிகளும் உடனே நீங்கும், புட்டி 1-க்கு 0—8—0

கணபதி பண்டசாலை, 25, மலைவாசல், தெப்பக்குளம், திருச்சி.

விளம்பர விவரம்.

கடையிலுள்ள சாமான்கள் தாமாகவே விலையாகா!

"விளம்பரம் செய்யாமற்போனால் எவ்வளவு நல்ல சரக்காக இருந்தபோதிலும் வியாபாரம் ஆகாது" என்று பெரிய ஆங்கில வியாபாரிகள் உறுதியாகச் சொல்லுகிறார்கள். விளம்பரம் செய்யக் கூடியது மாதச் சஞ்சிகையில்தான். ஏனென்றால் மாதச்சஞ்சிகைகளை மாதம் முழுவதும் படிப்பது மல்லாமல் ஒரு ஆண்டு கடைசியில் 12 இதழ்களும் பெற்ற பிறகேதான் ஒரு புத்தகமாகப் பயிண்டு செய்து எப்போதும் புத்தகசாலையில்வைத்து வாசிக்கக்கூடியது. மற்றவை அப்படியல்ல. ஆகவே, "தமிழர்" மாதச் சஞ்சிகையில் உங்கள் விளம்பரஞ் செய்யுங்கள். "தமிழர்" சஞ்சிகை இந்தியாவிலுள்ள ஒவ்வொரு மூலை முடுக்குகளிலும், வெளிநாடுகளிலுமுள்ள பெருத்த வியாபாரிகள் முதல் சிறிய வியாபாரிகளையும் நாடிச் செல்லுகிறது. இது வியாபாரத்தின் முன்னேற்றத்தை நாடி வெளிவருகிறது.

2. தமிழ் நாட்டில் உள்ள ஒவ்வொருவருடைய முன்னேற்றத்தையும் நாடிவருவதால் இந்தச் சஞ்சிகையைப்பெற்று மகிழ்ச்சியடையாதார் ஒருவருமே யிருக்கமாட்டார்கள்.

3. இந்த சஞ்சிகையில் விளம்பரம்செய்து அடையக்கூடிய பயனையும் விளம்பரம் செய்வதால் ஏற்படும் செலவையும் ஒப்பிட்டுப் பார்த்தால், செலவு ஒன்றுமேயில்லையென்று எண்ணலாம். இதைவிடக் குறைந்த சார்ஜுக்கு தமிழ்நாட்டிலுள்ள இதுபோன்ற எந்த சஞ்சிகையும் ஏற்றுக்கொள்ளாது.

4 அடுத்த 12-வது இதழ் இதைவிட அதிக விஷயங்களைக் கொண்டு 10,000 பேருக்குச் செல்லுவதால் காலந் தாழ்க்காது உடனே உங்கள் விளம்பரத்தை அமைச்சர், "தமிழர்" தெப்பக்குளம், திருச்சிராப்பள்ளி என்ற விலாசத்திற்கு எழுதுக.

கண்டிராக்டு ஒப்பந்த விகிதம்:—

ஒரு வருடத்திற்கு மொத்தமாக அட்வான்சு தொகை கொடுப்பவர்களுக்கு 100க்கு $12\frac{1}{2}$ வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்பெறும்.

ஆறு மாதத்திற்கு மொத்தமாகக் கொடுப்பவர்களுக்கு 100க்கு $6\frac{1}{4}$ வீதம் கமிஷன் தள்ளிக் கொடுக்கப்பெறும்.

மூன்று மாதத்திற்குக் குறையாமல் கொடுத்தால் $3\frac{1}{8}\%$ வீதம் தள்ளிக் கொடுக்கப்பெறும்.

ஒரு முழுப்பக்கத்திற்கு 10—0—0, அரைப்பக்கம் 5-0-0, கால் பக்கம் 3-0-0, துண்டுத் துணுக்கு விளம்பரங்கள்:-ஒரு வார்த்தைக்கு 0—2—0 (இது 24 வார்த்தைகளுக்கு மேற்படல் ஆகாது.)

5. ரூபாய்க்குக் குறைந்த விளம்பரப் பகுதிகளுக்குக் கமிஷன் கிடையாது. அமைச்சர், "தமிழர்" நிலையம், தெப்பக்குளம், திருச்சி.

இனாம்!　　　　ஒரு பவுன்!!　　　　இனாம்!!!

இதன் கீழ் குறிப்பிட்டிருக்கும் விடுகதை சதுரத்தை எவராவது அடுத்த பக்கத்திலுள்ள விதிகளை சரியானபடி கவனித்து நிறைவு செய்து, ஒரு அணா தபால் தலையுடன் எமக்கு அனுப்புவார்களாகில், அந்த விதமாகப் பெற்ற சரியான விடைகளுக்குள்ள பெயரைக் குறிப்பிட்டுள்ள சீட்டுகளைக் குலுக்கிப்போட்டு முதலில் எடுக்கும் பேருள்ள விலாசத்திற்கு நமது "தமிழர்." ஒரு ஆண்டுப் பத்திரிகைகளை இலவசமாக அனுப்புவோம். ஒரு ஆண்டு இறுதியில் வந்த 12 பெயருள்ள சீட்டுகளைக் குலுக்கிப் போட்டு முதலில் எடுத்த பேருக்கு ஒரு பவுன் இனாமாக அளிக்கப்பெறும்.

விடை இந்த சதுரத்திலேயே எழுதி இந்த பக்கத்தை கத்தரித்து, அமைச்சர் "தமிழர் நிலயம்", 25, மலைவாசல், தெப்பக்குளம். திருச்சிராப்பள்ளி, என்ற விலாசத்திற்கு அனுப்பவேண்டும்.

1		2	3		❀	4	5	6		7
	❀	40		❀	8	❀	41		❀	
9	10			11			❀	12	13	
14		❀	15	❀		❀	16	❀	17	
	❀	18		19	❀	20		21	❀	
❀	22									❀
23	❀	24			❀	25			❀	
	28	❀		❀	29	❀		❀	30	
31		32	❀	33			❀	34		
	❀	35	36	❀		❀	37		❀	
38					❀	39				

ஐயா, தாங்கள் கூறும் முடிவே கடைசி முடிவு என்றும், சட்டப்படி செல்லக்கூடிய தென்றும் ஒப்புக்கொள்ளுகிறேம்.

கையெழுத்து...

முழு பெயர்...

முழு விலாசம்...

விதிகள்.

ஒவ்வொரு வெள்ளை சதுரத்திற்கும் ஒரு எழுத்து போடவேண்டும். கணக்கிட்ட சதுரங்களிலிருந்து சொற்கள் ஆரம்பிக்கும் இடமிருந்து வலமாவது, மேலிருந்து கீழாவது சென்று பூக்களிட்டச் சதுரத்தில் சொற்கள் முடிவுபெறும். இந்த விதிகளைச் சிறிதும் தவறாமல் கவனித்து எழுதி யனுப்பாத விடைகளைக் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

முன்பக்கம் குறிப்பிட்டிருக்கும் இடத்திலேயே விடையும் விலாசமும் எழுதி யனுப்பவேண்டும். வேறு காகிதத்தில் எழுதினால் ஒப்புக்கொள்ள முடியாது. அட்சய, வைகாசி 18-உ தேதிக்குள் ஒரு அணா தபால் தலையுடன் எமக்கு கிடைக்கப் பெறுகிற விடைகளை மட்டும்தான் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும். இது சம்பந்தமாக வரும் யாதொரு கடிதப் போக்கிற்கும் பதிலளிக்க முடியாது. ஒரு முறை பரிசு பெற்றவர்கள் அந்த ஆண்டிலே மறுபடியும் கலக்கக்கூடாது.

நேரான வழிகள்.

இடமிருந்து வலம்.

1. உயர்குலத் தந்தைக்கும் இழிகுலத்தாய்க்கும் பிறந்த பிள்ளை.
4. அரிச்சந்திரன் தந்தை
9. கோழை
11. உபவீதம்
12, சபைகூடிச் செய்யும் கடனம் (தலை கீழ்)
14, கொடுக்க
17. "இ" பின்னானல் பாண்டவர் தாயாவாள்
18, நெல் வண்டு
20. கப்பலின் பிற்பக்கம்
22. வில் வித்தை
24, சிறு பெட்டி
25. உறுதி
27. வஞ்சனை
30. "மை" சேர்ந்தால் நட்பு
31. புசித்த
33. காலன்
34, மகர ஒற்று சேர்ந்தால் அரசகுமாரன் அடையும் ஓர் உயர்பதவி
35. புஷ்பவதி
37. அடைக்கலம்
38. போரில் வென்றோர்க்கு முற்காலத்திலிடும் வெற்றிமாலை
39. ஐம்பத்தாறு தேசத்தொன்று
40. மகளிர் கூட்டம்
41. பழமை யாகாதது

மேலிருந்து கீழ்.

1. வாலி மகன்
2. இரப்போர்க்குக் கொடுக்க மனம் வராமை
3. நிலம்
5. யதுவினது நான்காம் புத்திரன்
6. நான்கு
7. நிலைமொழி யீற்றில் நின்ற அகர ஆகாரமும் வருமொழி முதலினின்ற இகர ஈகாரமுங் கெட ஏகாரமும் நிலைமொழி யீற்று அகர ஆகாரமும் அவற்றொடு புணரவந்த உகர ஊகாரமுங் கெட ஓகாரமுந் தோன்றுவது
8. சூரியன் தேர்ப்பாகன்
10. அன்னிய
13. தாளக் குறிப்பு
15. அந்தி மந்தாரை
16. தேவர்க் கரசன்
18. எட்டு. 19. இழிவு
20, பலசாலி இருவர்மல்லுப் பிடித் [தல்
21. விவாகம்
23. சுயராச்சிய உறவு
26. முட்டையிற் பிறப்பன்
28. அழகிய. 29. வாயு
30. "டை" கடையானல் நட்சத்திரத்தொன்று
32. இரக்கம். 34. சோரது
46. பெண் (தலைகீழ்) [நுட்பம்
37. எட்டுவிநாடி கொண்ட ஓர்கால

கட்டளை யளிப்பவர்கள்:—

1 பெருந்திரு. பஞ்சாட்சரபுரம் வாலையானந்த சுவாமிகள்.
2 ,, மு. சி. பூர்ணலிங்கம் பிள்ளை யவர்கள், பி. ஏ எல். டி.
3 ,, ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள், தமிழ்ப்பண்டிதர், திருச்சி.
4 ,, கே. இலட்சுமண பிள்ளையவர்கள், பி ஏ. எம். எல். சி, திருவனந்தபுரம்
5 ,, இராமலிங்கம் பிள்ளையவர்கள் எம். ஏ. அரசியல் மொழி பெயர்ப்பாளர், திருவனந்தபுரம்.
6 திவான்பகதூர். S. பவானந்தம் பிள்ளையவர்கள். எம். ஆர். ஏ. எஸ்,. ஐ. எஸ். ஓ. போலீஸ்டிப்டி கமிஷனர் (Retd) சென்னை.
7 ,, அ. இறையொளி, தமிழாசிரியர், திருச்சி.
8 ,, அ. சுந்தரநாதம்பிள்ளை யவர்கள், வித்வான், திருச்சி.
9 ,, சி. வேதாசலம் அவர்கள் பி. ஏ. பி. எல். தஞ்சை.
10 ,, மு. நடேசமுதலியார் அவர்கள். தமிழ்ப்பண்டிதர், திருச்சி.
11 ,, காரைக்கால் அ. நாராயணசாமி நாயுடு. பத்திராதிபர், ஸ்ரீபுளிதா.
12 ,. ம. பெரியசாமி பிள்ளையவர்கள், தமிழ் ஆசிரியர்; பிறரும்.

புரவலர் காணிக்கை ரூ. 100.
ஆயுட்கால சந்தா ரூ. 25.

போற்றி ஆதரிக்கும் பெரியார்கள்.— (1) மகா சந்நிதானங்கள் துறவு நிலையில் உள்ள பெரியார்கள், (2) ஜமீன்தார்கள், (3) மிராசுதார்கள், (4) பெரிய அரசியல்துறை ஆட்சியாளர்கள் (5) காங்கிரசு தலைவர்கள் (6) தென்னிந்தியா நலவுரிமை கூட்டுறவு சங்கத்துப்பெரியார்கள், (7) ஜில்லாபோர்டு, தாலூகாபோர்டு, முனிசிபல் சபைத்தலைவர்கள் (8) ஜில்லா கலக்டர்கள், (9) ஜில்லா நியாயாதிபதிகள். 10 ஜில்லா அரசியல் கல்விப் பகுதி தலைவர்கள், (11) புலவர்கள், (12) கல்லூரித்தலைவர்கள் (13) சீரிய பெண்மணிகள், (14) சுகாதாரப்பகுதி ஆட்சியாளர்கள், (15) உழவுப்பகுதியிலுள்ள ஆட்சியாளர்கள் (16) அரசியல்துறை மருத்துவ ஆட்சியாளர்கள் (17) பெரிய வழக்கறிஞர்களும் பிறரும் ஆவார்கள்.

ம. உ. க. பஞ்சரத்தினம்,
பதிப்பாளரும், தாள் ஆளரும்,
25, மலைவாசல் கடைவீதி,
தெப்பக்குளம், (போஸ்டு), திருச்சிகோட்டை.

இனாம்! ஒரு பவுன் !! இனாம்!!

உ

"தமிழர்"

(ஓர் இனிய தனித்தமிழ் மாத வெளியீடு)

வேண்டுகோள்.

1. *தமிழர்கள் எல்லோரும் தங்கள் முன்னேற்றத்தை விரும்பினால் இதற்கு உடனே சந்தாநேயராகச் சேருங்கள்!*

2. *அதிக வரும்படி சம்பாதிக்க வேண்டுமென்கிற எண்ணமிருந்தால் இதற்கு உடனே சந்தாநேயராகச் சேருங்கள்!*

3, *பல மாதச்சஞ்சிகைகளை வாங்கி அலுத்துப்போய், ஒரே சஞ்சிகையில் எல்லா விஷயங்களும் ஒருமிக்கப் பார்க்கவேண்டும் என்னும் எண்ணமிருந்தால் இதற்கு உடனே சந்தாநேயராகச் சேருங்கள்!*

4. *பிறரைக் குறைகூறாமல் ஆண்மக்கள், பெண்மக்கள், குழந்தைகள் ஆகிய எல்லாருடைய நலத்தையும் கருதக்கூடிய சஞ்சிகை ஒன்று வேண்டுமானால் அது "தமிழர்" சஞ்சிகையே.*

5. *தமிழ் நாட்டில் உழவினால் வாழக்கூடியவர்கள் 100-க்கு 70 பேருக்குமேல் ஆவர், ஆகவே, உழவின் வளர்ச்சியை நாடிவருவது "தமிழர்" சஞ்சிகையொன்றே.*

6. *தமிழ்நாடு பிறநாடுகளைவிட வியாபாரத்தில் குறைவாகவே இருந்துவருகிறது. ஆகவே, வியாபாரம் வளரவேண்டுமானால் இந்த சஞ்சிகைக்குச் சந்தாநேயராக உடனே சேர வாருங்கள்.*

7. *தமிழ்வார்த்தை சதுர விடுகதை பரிசுகள்:—ஒரு பவுனும் 12 "தமிழர்" ஆண்டு சஞ்சிகைகளும் இனாமாக அளிக்கப்பெறும்.*

முயற்சியுடையார் ஒவ்வொருவரும் மாதம் ரூபாய் 100-ம் அதற்கு மேலும் சம்பாதிக்கலாம். தமிழ்நாடு முழுதும் ஏஜண்டுகள் தேவை.

அறிவு, ஆற்றல், ஆராய்ச்சித்துறைகளில் சிறந்த அறிஞர்களால் எழுதப்பெற்ற பல்வேறு அருமையான கட்டுரைகளைக்கொண்டு தமிழர்களின் முன்னேற்றத்திற்கான பல்வேறு துறைகளையும் இச்சஞ்சிகையில் ஒருங்கே காணலாம். (டெமி ஆக்டவோ) பெரிய அளவில் 40 பக்கங்களுக்கு மேல் வெளிவருவது

		ஒரு ஆண்டுக்கையொப்பம்,		ஆறுமாதக்கையொப்பம்.
இராயல் பதிப்பு:				
உள்நாட்டிற்கு	ரூ.	2-8-0.	...	ரூ 1-8-0
வெளிநாட்டிற்கு	,,	3-0-0	...	,, 2-0-0
சாதாரண பதிப்பு	,,	2-0-0	...	,, 1-4-0
ஆயுட்கால சந்தா	...	ரூ. 25-0-0	தனிச்சஞ்சிகை	ரூ 0-4-0

5 *ஆண்டு சந்தாதாரர்களைச் சேர்த்து முன் பணம் அனுப்புகிறவர்களுக்கு ஒரு ஆண்டு சஞ்சிகை இனாம்.* **10** *ஆண்டு சந்தாதாரர்களைச் சேர்த்து முன் பணம் அனுப்புகிறவர்களுக்கு ரூ.5/-பெறுமானமுள்ள எமது தமிழ் விலைப் பட்டியலிற் கண்ட சாமான்கள் இனாம்.*

அமைச்சர், "தமிழர் நிலையம்", தெப்பக்குளம், *திருச்சிராப்பள்ளி.*

Printed by T. K. Rajagopalan at the Jananukoola Press and
Published by M. H. G. Pancharatnam, Editor, Teppakulam, Trichy.